விலை ரூபா: 7.00

Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்:- பன்னிரண்டு

சங்கு 05 வள்ளுவர் ஆண்டு 2035 புரட்டாதி 19 செவ்வாய்க்கிழமை (05.10.2004) தொலைபேசி - 2223378 ஒலி 291

ராம்கோ MADRAS CEMENTS LTD RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் சிமெந்து
முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது.

## இடைக்கால நிர்வாகப் பேச்சுடன் இறுதி தீர்வு பற்றியும் பேசவேண்டும்

### தேசிய ஆலோசனைச் சபைக் கூட்டத்தில் ஜனாதிபதி



(கொழும்பு)

பிரதான எதிர்க்கட்சிகளின் ஆதரவின்றி ஜனாதிபதியினால் முன்மொழியப்பட்ட தேசிய ஆலோசனைச் சபை நேற்று மாலை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவினால் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டது.

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி, மலையக மக்கள் முன்னணி, மேல் மாகாண மக்கள் முன்னணி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, முஸ்லிம் காங்கிரஸ் ஆகிய கட்சிகள் நேற்றைய கூட்டத்தில் கலந்துகொள்ளவில்லை.

பேச்சுவார்த்தையை ஆரம்பிக்காமல் இவ்வாறான ஆலோசனைச் சபை அமைப்பது காலத்தை இழுத்தடிக்கும் செயலாகும் என்றும் ஆளும் கூட்டணிக்குள் காணப்படும் முரண்பாடுகளை மறைப்பதற்கும் புலிகளுடன் சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கும் செயற்பாட்டை இழுத்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி சந்திரிகாவினால் அமைக்கப்படும் எந்த சபையிலும் எமக்கு நம்பிக்கையில்லை

### ஜெனிவாவில் தமிழ்ச்செல்வன் தெரிவிப்பு



(ஜெனிவா)

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவினால் கூட்டப்பட்டுள்ள சமாதானத்திற்கான தேசிய ஆலோசனைச் சபை போன்ற குழுக்களில் எமக்கு நம்பிக்கையில்லை என்று தற்போது ஜெனிவாவில் தங்கியுள்ள விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் தலைமையிலான அரசியல் விவகாரக்குழு ஐரோப்பிய நாடுகளுக்கான விஜயம் ஒன்றை மேற்கொண்டு சுவிஸ்லாந்து சென்றுள்ள நிலையில் சு.ப. தமிழ்ச்செல்வன் செய்தி ஊடகங்களுக்கு அளித்த பேட்டியொன்றிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

# பேச்சுவார்த்தைகள் கைக்கெட்டாமல் செல்கின்றபோதும் சமாதான முயற்சிகளில் புலிகள் ஆர்வம் காட்டுவது பாராட்டத்தக்கது

### நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் ஹெல்க்சன்

(ஜெனிவா)

**இலங்கை இனப்பிரச்சினை தீர்வுக்குரிய சமாதான முன்னெடுப்புக்கள் மிக நீண்ட தூரத்தில் கைக்கெட்டாத நிலையில் உள்ள போதும், தமிழீழ விடுதலைப் புலிகள் சமாதான நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவது மகிழ்ச்சி தரக்கூடிய விடயமாக இருப்பதாக நோர்வேயின் பிரதிவெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கீசன் தெரிவித்துள்ளார்.**

இடைக்காலத் தன்னாட்சி வரைபு குறித்த கலந்துரையாடல்களை சர்வதேச சட்ட நிபுணர்களுடன் மேற்கொள்வதற்காக சுவிஸ்லாந்தின் ஜெனிவா நகரிற்குச் சென்றுள்ள தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் தலைமையிலான உயர் மட்டக் குழுவினரையும் தமிழர் தாயக மனித உரிமைகள் பிரதிநிதிகளையும் சந்தித்துக் கலந்துரையாடிய பின்னரே நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர்

(12 ஆம் பக்கம் பார்க்க)



## உலக வங்கிக் குழு நேற்று யாழ். விஜயம்

(யாழ்ப்பாணம்)

உலக வங்கியின் தூதுக்குழுவினர் நேற்று யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்து யாழ். அரச அதிபருடன் பேச்சு நடத்தியதுடன் உலக வங்கியின் நிதியுதவியுடன் முன்னெடுக்கப்பட்டுவரும் 125 வீடமைப்புத் திட்டங்களின் நிலை குறித்து ஆராய்ந்து சென்றுள்ளனர்.

உலக வங்கியின் பிரதிநிதிகளான நரேஷ் துரைசாமி மற்றும் கலாநிதி எடாடன் நாராயணன் ஆகியோர் தலைமையில் 7 பிரதிநிதிகள் கொண்ட குழுவினர் நேற்று யாழ்ப்பாணம் வந்தனர்.

நேற்று காலை 10.30 மணியளவில் யாழ்ப்பாணம் வருகை தந்த அவர்கள் யாழ். அரச அதிபருடன் பேச்சு நடத்தினர். பின்னர் கொழும்புத்துறை, அரியாலை, கைதடி, நாவற்குழி ஆகிய இடங்களுக்குச்

(12 ஆம் பக்கம் பார்க்க)

### கவிதைப் போட்டி முடிவுகள் நாளை...

**வலம்புரியின் ஆதரவுடன் நடத்தப்பட்ட சோமசுந்தரம் ஞாபகார்த்த கவிதைப் போட்டி முடிவுகள். நாளை வெளிவரும்.**

**ஆசிரியர்**

## பொலநறுவையில் மூவர் கடத்தல்

(மட்டக்களப்பு)

பொலநறுவை மாவட்டம் கர்பலா கிராமத்தில் 3 பேர் இனந்தெரியாதோரால் கடத்தப்பட்டுள்ளனர்.

இவர்களில் ஒருவர் தாக்கப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்டுள்ள போதிலும், ஏனையோர் பற்றி இதுவரை எதுவித தகவல்களும் இல்லை.

கடந்த வெள்ளிக்கிழமை இரவு வாகனமொன்றில் வந்தவர்களினாலேயே இவர்கள் கட்டத்தப்பட்டுள்ளார்கள். கணபதிப்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.நா. மனிதவுரிமைகள் அமைப்புடன் வட-கிழக்கு மனிதவுரிமைக்குழு பேச்சு



(ஜெனிவா)

சர்வதேச மனித உரிமைகள் அமைப்பின் முன்னாள் தலைமைச் செயலாளர் நாயகமும் இலங்கை மனித உரிமைகள் அமைப்பிற்குத் தலைமை தாங்கும் குழுவின் தலைவருமான இயன் மார்ட்டீன் வடக்கு கிழக்கு மனித உரிமைக் குழுவினருடன் ஜெனிவாவில் விசேட பேச்சுக்களை நேற்று நடாத்தியுள்ளார்.

இக்கூட்டத்தை சுவிஸ்லாந்து மனித உரிமைகள் அமைப்பான நெஷோர் நிறுவனத்தின் மனித உரிமைகளுக்கான அறிஞர் பாஸ் கெல் பரிஸ்வைல் ஆரம்பித்து வைத்து, விரிவான ஆய்வுரை ஒன்றையும் நடாத்தினார். நீண்ட காலப் போரினால் பாதிப்படைந்த ஒரு இனத்தின் தனிமனித உரிமைகள் மீளச் சீர் செய்யப்படுவதன் அவசியம் குறித்தும், தனிமனித உரிமைகளை எவ்வாறு பணிப் பாதுகாப்பது போன்ற விடயங்கள் குறித்தும் விரிவாக ஆராயப்பட்டுள்ளது. (ச)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# பின்தங்கியிருந்த வன்னிப் பிரதேசம் இன்று அபிவிருத்தியை நோக்கி முன்னேறிவருகிறது

## அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் தெரிவிப்பு

(மன்னார்)

இலங்கை அரசின் இராணுவ நெருக்குவாரங்களுக்கு உட்பட்டுப் பல வழிகளினாலும் பின்தங்கிய நிலையிலிருந்த வன்னிப் பிரதேசம் இன்று கணிசமான அளவு அபிவிருத்தியைநோக்கி முன்னேறிவருகின்றது என தமிழீழ அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் தெரிவித்துள்ளார்.

மன்னார் பகுதிகளில் நிக்கொட் திட்டத்தின் உதவியுடன் அமைக்கப்பட்ட கட்டடங்களைத் திறந்து வைத்து உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில், தற்போதைய சூழ்நிலையை அடுத்து சில அபிவிருத்தித்திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றபோதிலும் மேலும் அபிவிருத்தித் திட்டங்களை வன்னியில் முன்னெடுக்க வேண்டியுள்ளது.

இதனைச் சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் கவனத்திலெடுத்து அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொள்ளவேண்டும் என்றும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில், மன்னார் மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் எஸ்.இனியவன், மன்னார் அரச அதிபர், வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான சிவநாதன் கிஷோர், வினோதரலிங்கம் ஆகியோர் உட்பட மற்றும் பலரும் கலந்துகொண்டனர். (ற-8)

# பேருந்துக் கட்டணம் இன்றுமுதல் அதிகரிப்பு

மத்திய போக்குவரத்துச் சபையின் பொது முகாமையாளரின் பணிப்பிற்கு இணங்க வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் சகல பேருந்துச் சேவைகளின் கட்டணங்களும் இன்று செவ்வாய்க்கிழமை அதிகாலையிலிருந்து உயர்த்தப்பட்டுள்ளதாக வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் பொது முகாமையாளர் அறிவித்துள்ளார்.

கட்டண உயர்வு விபரம் பின்வருமாறு,

| தற்போதைய கட்டணம் | | புதிய கட்டணம் |
|---|---|---|
| 03.50 | - | 04.00 |
| 05.00 | - | 06.00 |
| 06.00 | - | 07.00 |
| 08.00 | - | 09.00 |
| 09.00 | - | 10.00 |
| 10.00 | - | 11.00 |
| 12.00 | - | 13.00 |
| 13.00 | - | 14.00 |
| 14.00 | - | 15.00 |
| 15.50 | - | 16.50 |
| 17.00 | - | 18.00 |
| 19.00 | - | 20.00 |
| 20.00 | - | 21.00 |
| 21.00 | - | 22.00 |
| 21.50 | - | 22.50 |
| 23.00 | - | 24.00 |
| 23.50 | - | 24.50 |
| 24.00 | - | 25.00 |
| 27.00 | - | 28.00 |
| 28.00 | - | 30.00 |
| 30.00 | - | 32.00 |
| 30.50 | - | 32.50 |
| 31.00 | - | 33.00 |
| 33.50 | - | 35.50 |
| 35.00 | - | 37.00 |
| 41.00 | - | 44.00 |

(ற)

# நல்லொழுக்க தினம் அனுஷ்டிப்பு

(கரவெட்டி)

போரூட் நிறுவனத்தின் அனுசரணையுடன் வடமராட்சி ஒளி நிறுவனத்தினால் சர்வதேச நல்லொழுக்க தினம் நேற்று முன்தினம் நெல்லியடி மகாவித்தியாலயத்தில் அனுஷ்டிக்கப்பட்டது.

இந்நிகழ்வில், வைத்தியகலாநிதி ந.ரவிராஜ் நல்லொழுக்கம் பற்றிய கருத்துரையை வழங்கினார். இதில் விசேட நிகழ்ச்சியாக உதைபந்தாட்டப்போட்டி நடைபெற்றது. வல்வெட்டித்துறை வல்லை விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கொற்றாவத்தை சிவானந்தா விளையாட்டுக்கழகம் மோதியது. இதில் கொற்றாவத்தை விளையாட்டுக்கழகம் 2:1 என்ற கோல் கணக்கில் வென்றது. (ற-105)

# ஊர்காவல் படையினரை விடுவிக்க அரசு தீவிர முயற்சி

(திருகோணமலை)

விடுதலைப்புலிகளால் தடுத்து வைக்கப்பட்டுள்ள இரு ஊர்காவல் படையினரை விடுவிப்பது தொடர்பாக அரசு முக்கிய பிரதிநிதி ஒருவரை திருகோணமலைக்கு அனுப்பி வைத்திருப்பத்ாக தெரியவருகிறது.

திருமலையில் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் நடமாடிய இரு ஊர்காவல் படையினரை விடுதலைப்புலிகள் கைதுசெய்து தடுத்துவைத்துள்ளனர்.

தமது தரப்புப் போராளிகளை அரசு விடுதலை செய்தால் மட்டுமே ஊர்காவல் படையினரை தம்மால் விடுவிக்கமுடியும் என விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, விடுதலைப்புலிகளால் தடுத்துவைக்கப்பட்டுள்ள ஊர்காவல் படையினரை விடுவிக்க அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும் எனக்கோரி கைதுசெய்யப்பட்டுள்ள ஊர்காவல்படையினரின் உறவினர்கள் திருமலை மணிக்கூட்டுக் கோபுரத்திற்கு அருகில் உண்ணாவிரதப் போராட்டத்தை நடத்தி வருகின்றனர்.

நாளை மறுதினத்திற்கு முன்னதாக தமது உறவினர்களின் விடுதலைக்கு அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுக்கத்தவறினால் நாடளாவிய ரீதியில் தமது போராட்டத்தை விஸ்தரிக்கப்போவதாகவும் அவர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இந்நிலையில் அரசு தமது பிரதிநிதி ஒருவ்ரை விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்த அனுப்பியிருக்கிறது. இதேவேளை உண்ணாவிரதத்தில் ஈடுபட்டுள்ளோரை சந்திக்கச்சென்ற ஜாதிகஹெல உறுமயக்கட்சியைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர் கொலன்னாவா ஶ்ரீ சுமங்கள தேரரைச் சந்திக்க உண்ணாவிரதம் இருப்போர் அனுமதிக்கவில்லை.

தமது போராட்டத்தில் அரசியலைக் கலக்க அவர்கள் விரும்பவில்லை என்பதாலேயே அவரைச் சந்திக்கவிரும்பவில்லை எனவும் உண்ணாவிரதிகள் தெரிவித்துள்ளனர். (க-7)

# வீரகாவியமான பன்னிரு வேங்கைகளின் 17 ஆம் ஆண்டு நினைவுதின நிகழ்வுகள்

இலங்கை - இந்தியக் கூட்டுச் சதியினால் வீரகாவியமான லெப். கேணல் குமரப்பா, லெப்.கேணல் புலேந்திரன் ஆகியோர் உட்பட பன்னிரு வேங்கைகளின் உருவப்படங்கள் இன்று செவ்வாய்கிழமை பி.ப. 4 மணிக்கு தீருவில் சந்தியிலிருந்து பாண்ட் வாத்தியங்கள் சகிதம் ஊர்வலமாக எடுத்துச்செல்லப்பட்டு குமரப்பா புலேந்திரன் நினைவுச் சதுக்கத்தை சென்றடையவுள்ளது.

வடமராட்சி மாவீரர் துயிலும் இல்லப் பொறுப்பாளர் வே.தமிழரசன் தலைமையில் இச் சதுக்கத்தில் நடைபெறவுள்ள 17 ஆம் ஆண்டு நிகழ்வில், சங்கநாதம் நிகழ்வு, கடற்புலிகளின்மகளிர் பிரிவினரின் நாடகம் மற்றும் தமிழீழ இசைக் குழுவினரின் இசை நிகழ்வு ஆகியன நடைபெறவுள்ளன. இந்நிகழ்வில் விடுதலைப் புலிகளின் முக்கிய பிரமுகர்கள் பலரும் கலந்துகொள்ளவுள்ளனர். (ற-43,101)

# அரச வைத்தியசாலைகளுக்கு மருத்துவ உபகரணங்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண சுகாதார திணைக்களத்திற்கு 'நீரப்' திட்டத்தின்கீழ் சத்திர சிகிச்சைக்கான மருத்துவ உபகரணங்களும், பல் சிகிச்சைக்கான கருவிகளும் வடக்குக் கிழக்கு மாகாண சுகாதார அமைச்சினால் வழங்கப்படவுள்ளது.

இதற்கமைய இந்தவாரம் இந்த உபகரணங்கள் கொழும்பிலிருந்து கொண்டுவரப் படவுள்ளன.

யாழ். மாவட்டத்திலுள்ள அரசினர் வைத்தியசாலைகளுக்கு இவை விநியோகிக்கப்படவுள்ளதாக யாழ். சுகாதார திணைக்கள உயரதிகாரி தெரிவித்தார். (க-05)

# மட்டு - வாகரைப் பிரதேச தாக்குதல் குறித்து விடுதலைப் புலிகள் அறிக்கை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு வாகரைப் பிரதேசத்தில் தேசவிரோதக் கும்பலொன்றின் மறைவிடம் மீதான தாக்குதலின்போது ஆயுதங்களும், இராணுவத் தளபாடங்களும் தங்களால் கைப்பற்றப்பட்டுள்ளதாக விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட அரசியல்துறை அறிவித்துள்ளது. நேற்று முன்தினம் காலை வாகரைப் பிரதேசம் மதுரங்குளம் ஓமடியாமடுவில் இடம்பெற்ற அதிரடி நடவடிக்கை தொடர்பாக அறிக்கையொன்று விடுதலைப் புலிகளினால் நேற்று விடுக்கப்பட்டுள்ளது. அவ் அறிக்கையில், கடந்த சனிக்கிழமை காலை 6.45 மணியளவில் வாகரை ஓமடியாமடுவில் தேசவிரோத கும்பல்களில் ஒன்றான கருணாகுழு மீது விடுதல்லைப்புலிகளால் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இதில் அந்த குழுவைச் சேர்ந்த நித்தி மற்றும் கஸ்ரோ ஆகியோர் கொல்லப்பட்டுள்ளனர். ஏனையோர் தப்பியோடிவிட்டனர். தொடரிலக்கம் அழிக்கப்பட்ட ரி-56 ரக துப்பாக்கியொன்று, ஆர்.பி.ஜி. ஏறிகணைகள், கிளைமோர் கண்ணிவெடிகள், வயர்கள் மற்றும் இராணுவ தளபாடங்கள் ஆகியன கைப்பற்றப்பட்டுள்ளன. கொல்லப்பட்ட நித்தி பனிச்சங்கேணியிலுள்ள விடுதலைப் புலிகளின் முன்னணி காவல்நிலைகள் மீது மேற்கொள்ளப்பட்ட ஆர்.பி.ஜி. தாக்குதல்களுக்கும், இதன் காரணமாக 50 வயதுடைய கணபதி காளிப்பிள்ளை என்பவரின் மரணத்திற்கும், இப் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட கிளைமோர் தாக்குதல் சம்பவமொன்றிற்கும் நேரடியாகப் பொறுப்பானவர் என அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, மட்டக்களப்பு கிழக்கு வாகரை மதுரங்குளத்தில் நேற்றுமுன்தினம் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும், கருணா அணியினருக்கும் இடையில் நடைபெற்ற மோதலின்போது பொதுமகன் ஒருவர் உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஓடியாமடுப் பகுதியில் வசிக்கும் தம்பியா மன்னவன் (வயது 32) என அடையாளக் காணப்பட்டுள்ளார்.

உயிரிழந்தவர் காட்டிலே வேட்டையாடச் சென்றவேளை எதிர்பாராதவிதமாக துப்பாகிச் சூட்டுக்கு இலக்காகி மரணமடைந்துள்ளார் என இவரது உறவினர்கள் வாழைச்சேனைப் பொலிஸாருக்கு அறிவித்துள்ளார்கள். (ச -121)



யாழ். மாவட்ட பனை தென்னை வள கூட்டுறவுச் சங்கத்தின் கூட்டுறவு உதவி ஆணையாளர் க.கணேசமூர்த்தியின் சேவைநலன் பாராட்டு விழா நேற்றைய தினம் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது. இவ்விழாவில் கலந்துகொண்டவர்களையும், சு.கணேசமூர்த்தி உரையாற்றுவதையும் படத்தில் காணலாம்.

படம்: ஐங்கரன்

க.பொ.த. (சா.த)
மாணவர்களேயூ வலம்புரியில்
தொடர்ந்து பயிற்சி
வினாத்தாள்கள்
வெளிவருகின்றன.

## விவாத அரங்கு - 6

விடயம்

மதமாற்றத் தடைச் சட்டம்
தேவையானதா?
தேவையற்றதா?

நடுவர் : விதுரன்

உங்கள் வாதங்களை எழுதி அனுப்பி வையுங்கள்

அனுப்பவேண்டிய முகவரி
விவாத அரங்கு
வலம்புரி
இல.15, வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்.

# பாக்டெல் முக்கோணத் தொடர்

# பாகிஸ்தான் அணி சிம்பாப்வே அணியை 3 விக்கெற்றுக்களால் தடுமாறி வென்றது

பாகிஸ்தானில் நடைபெறும் 'பாக்டெல்' முக்கோணத் தொடர் கிரிக்கெற் போட்டியில் நேற்று





முன்தினம் நடைபெற்ற பாகிஸ்தான் சிம்பாவவே அணிகளிடையேயானபோட்டியில் பாகிஸ்தான் அணி 3 விக்கெற்றுக்களால் வெற்றி பெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பாகிஸ்தான் அணி சிம்பாவ்வேயை முதலில் துடுப்பெடுத்தாடப் பணித்தது. அதன்படி களமிறங்கிய சிம்பாவ்வே 50 ஓவர்களில் 4 விக்கெற்றுக்களை இழந்து 252 ஓட்டங்களை எடுத்தது.


ஆரம்பத்துடுப்பாட்ட வீரர்களாக களமிறங்கிய மற்சிக்கென்யேரியும் ரெயிலரும் சிறப்பாக விளையாடினர். அணி 87 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் தனது முதலாவது விக்கெற்றாக மற்சிக்கென்யேரியை இழந்தது. அவர் 41 ஓட்டங்களைப் பெற்றிருந்தார். ரெயிலர் 73 ஓட்டங்களை 6 பவுண்டரிகள் உட்படப் பெற்றபோது ஆட்டமிழந்தார். தைபு மிக வேகமாக ஆடி 33 பந்துகளில் 3 சிக்ஸர 1 பவுண்டரி உட்பட 46 ஓட்டங்களையும், இப்ராஹிம் 71 ஓட்டங்களையும் பெற்று ஆட்டமிழந்காதிருந்தனர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி ஒரு ஓட்டத்தை மட்டுமே பெற்றிருந்தபோது தனது முதல் விக்கெற்றை இழந்தது. சொகைப் மாலிக் சிறப்பாக விளையாடி 80 ஓட்டங்களைப்பெற்றார் யூனிஸ்கான் 77 ஓட்டங்களையும் சல்மான்ட் 30 ஓட்டங்களையும் பெற்றனர். அவ்ரிடி 6 பந்துகளில் 2 சிக்ஸர்கள் உட்பட 16 ஓட்டங்களை வேகமாகப் பெற்று அணியின் வெற்றியை நிச்சயப்படுத்தினார்.

48.1ஓவரில் பாகிஸ்தான் அணி 7விக்கெற்றுக்களை இழந்து 258 ஓட்டங்களைப் பெற்று 3 விக்கெற்




றுக்களால் வெற்றிபெற்றது. பந்து வீச்சில் பணியங்கார 3 விக்கெற்றுக்களையும், டக்ளஸ் ஹொண்டா 2விக்கெற்றுக்களையும் என்காலா 1 விக்கெற்றையும் பெற்றனர்.(க-7)



இத்தாலியின் வெரோனா நகரில் நடைபெற்ற உலக சம்பியன்ஷிப் சைக்கிளோட்டப்போட்டியில் வீரர்கள் போட்டியிட்டுச் செல்கின்றனர். இப் போட்டியில் ஜேர்மனியைச் சேர்ந்த யுடித் ஆன்ற் வெற்றி பெற்றார்.

# கிரிக்கெற் கழகத்தில் தீ விபத்து

## தென் ஆபிரிக்காவில் சம்பவம்

தென் ஆபிரிக்காவிலுள்ள வரலாற்றுப் புகழ்மிக்க வோண்டர்ஸ் கிரிக்கெற் கழகக் கட்டடம் கடந்த புதன்கிழமை தீப்பிடித்துக்கொண்டது.

11 தீயணைப்பு வண்டிகள் உட்பட 35 தீயணைப்பு வீரர்கள இரவு முழுவதும் போராடி தீயை அணைத்தனர்.

சமையலறையில் ஏறபடட எரிவாயுகொள்கலன் வெடித்ததனாலேயே இத் தீவிபத்து ஏறபட்டதாக ஜோஹனஸ்பேர்க் நகர அவசரகால சேவை செயதித தொடர்பாளர் ஸ்டீபன் கிரக் தெரிவித்துள்ளார்.

இத்தீவிபத்தில் வோண்டாஸ் கழக கட்டடம் பலத்த சேதமடைந்துள்ளது. பிரதான மண்டபம் மட்டுமே தப்பியுள்ளது.

கட்டடத்திற்கு பின்னால் இருந்த அதிகாரிகளின் வீடுகளுக்கு இத் தீயினால் எந்த சேதமும் ஏற்படவில்லை.

1880ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட வோண்டர்ஸ் கிரிக்கெற்கழகம் 1930ஆம் ஆண்டிலிருந்து இக் கட்டடத்தில் இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-7)

## பங்களாதேஷ் அணிக்கு அலோக் கபாலி தலைவர்

நியூசிலாந்து அணிக்கும் பங்களாதேஷ் அணிக்கும் இடையிலான 3 நாள் பயிற்சிப் போட்டி எதிர்வரும் 14ஆம் திகதி ஆரம்பமாக இருக்கிறது. பங்களாதேஷ் அணிக்கு சகலதுறை ஆட்டக்காரரான அலொக் கபாலி தலைமை தாங்குகிறார். பங்களாதேஷ் அணியிலிருந்து நீக்கப்பட்டுள்ள கபாலிக்கு மீண்டும் ஒரு வாய்ப்பை வழங்கும் நோக்கிலேயே இப்பதவி வழங்கப்பட்டிருப்பதாக பங்களாதேஷ் கிரிக்கெற் சபை தெரிவித்துள்ளது். நியூசிலாந்து அணி எதிர்வரும் 8ஆம் திகதி பங்களாதேஷிற்கு விஜயம் செய்யவுள்ளது. இரு அணிகளுக்கிடையிலான முதலாவது போட்டி எதிர்வரும 19ஆம் திகதி ஆரம்பமாகும். (க-7)

## ஒளிபரப்பு உரிமைப் பிரச்சினை தொடர்கிறது

இந்திய அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையிலான கிரிக்கெற் போட்டிகளை ஒளிபரப்புவதற்கான உரிமையை சொனி ரிவி நிறுவனத்துக்கு வழங்கியமையை எதிர்த்து பிரசாத் பாரதி நிறுவனம் மேல் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்ய முடிவெடுத்துள்ளது.

பிரசாத் பாரதி நிறுவனம், சொனி ரிவி நிறுவனத்தைவிட அதிக தொகையை வழங்க முன்வந்தும் கூட இந்திய கிரிக்கெற் கட்டுப்பாட்டுசசபை சொனி ரிவிக்கு வழங்க முடிவு எடுத்ததை யடுத்து பிரசாத் பாரதி இம்முடிவை எடுத்துள்ளது.

இக கிரிக்கெற் ஒளிபரப்பு உரிமையை முழுவதுமாக தானே பெற்றுககொள்ள பிரசாத் பாரதி விரும்புகின்ற அதேவேளை, சொனி ரிவி நிறுவனததுக்கும் ரென் ஸ்போட்ஸ் நிறுவனத்துக்கும் ஒளிபரப்பு உரிமையை வழங்க வேண்டாமென இந்திய கிரிக்கெற் சபையை ஜி ரிவி நிறுவனம் கேட்டுள்ளது.(க-7)

## டேவிஸ் கோப்பை டென்னிஸ் இந்தியாவுக்கு பல வெற்றிகள்

ஜூனியர் டேவிஸ் கோப்பை டென்னிஸ் போட்டியில் இந்திய அணி மெறக்கோ மற்றும் துனிசியா அணிகளை வென்றுள்ளது.

ஸ்பெயினில் உள்ள பார்சிலோனா நகரில் நடைபெறும் ஜூனியர் டேவிஸ் கோப்பை உலக டென்னிஸ் போட்டியில் 16 நாடுகள் பங்கேற்கின்றன. மொத்தம் நான்கு பிரிவுகளாக இவை பிரிக்கப்பட்டுள்ளன. குழு 2இல் இடம் பெற்றுளள இந்திய அணி கடந்த வியாழன் அன்று நடந்த போட்டியில் மொறாக்கோ அணியை எதிர்த்து விளையாடியது. முதல் போட்டியில் இந்தியாவின் நெடுஞ்செழியன் 7-5,6-1 என்ற நோ செற்களில் மெடிபென்ஹூமோவை வென்றார். அடுத்த போட்டியில் ராய் 7-5,7-6 என்ற செற்களில் ரேடா எல் அம்ரானியை வெற்றிபெற இந்திய அணி 2-0 என்ற அடிப்படையில் முன்னிலைபெற்றது. இரட்டையர் போட்டியில் ராய், சிங் ஜோடி 6-3 6-2 என்ற செற்களில் அயூப் பனாமர், பென்ஹூமோவ் ஜோடியை வீழ்த்தியது.

இதன்மூலம் இந்திய அணி 3-0 என்ற அடிப்படையில் வெற்றி பெற்றது. முன்னதாக நடந்த முதல போட்டியில் இந்திய அணி 3-0 என்ற அடிப்படையில் துனிசியாவை வென்றது. அடுத்ததாக நான்காம் நிலை அணியான செக்குடியரசை எதிர்த்து விளையாடவுள்ளது. இதில் வெற்றிபெற்றால் இந்திய அணி அரையிறுதிக்குள் நுழையும். (க-7)

# விளையாட்டு செய்திகள்

## அவுஸ்திரேலியத் தொடருக்கான இந்திய அணி அறிவிப்பு

இந்தியா அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையே நடைபெறவுள்ள முதல் 2 டெஸ்ட் போட்டிகளில் விளையாடவுள்ள இந்திய அணியின் 15 வீரர்கள் கொண்ட பெயர்ப பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது.

முழங்கையில் ஏற்பட்ட 'டென்னிஸ் எல்போ' எனும் காயம் காரணமாக கடந்த ஒன்றரை மாதமாக எநதப் போட்டிகளிலும் விளையாட முடியாதிருந்த இந்திய அணியின் நட்சத்திர துடுப்பாட்ட வீரர் சச்சின் டெண்டுல்கரின் பெயரும் இப்பட்டியலில் இடம்பெறுகிறது.

காயத்தில் இருந்து குணமாகி வரும் சச்சின் இன்னும் முழுமையாக பயிற்சிகளில் ஈடுபடவில்லை. இந்தியாவில் பலம் பொருந்திய அவுஸ்திரேலிய அணிக்கெதிராக சச்சின் விளையாடுவது தொடர்பான முடிவு இறுதி நேரத்திலேயே எடுக்கப்படும். இறுதிநேர உடல் தகுதிச் சோதனை முடிவின் படியே அவர் விளையாடுவது தொடர்பாக தீர்மானிக்கப்படும.

இதேவேளை, எப்போதுமே ஆரம்ப ஆட்டக்காரராகவே களமிறங்க விரும்பும் டெண்டுல்கருக்கு இம்முறை அந்தச் சந்தர்ப்பம் வழங்கப்படவில்லை. ஏனெனில் ஆரம்பத்துடுப்பாட்ட வீரராக அவர் களமிறங்குவதால் அதிகநேரம் துடுப்பெடுத்தாட சந்தர்ப்பம் கிடைக்கிறது. இதனாலேயே டெண்டுல்கர் அதிக ஓட்டங்களைக் குவிக்கவும் சதம் அடிக்கவும வாய்ப்புக்கிடைக்கிறது.

இதை விரும்பாத இந்திய அணித தலைவர் கங்குலி பலதடவை அவரை மத்திய தர வரிசைக்கு இறக்கி இருக்கிறார். இப்போதும் அவுஸ்திரேலியாவுக்கு எதிராக ஆரம்பத் துடுப்பாட்ட வீரராக களமிறங்க ஆவலோடு காத்திருந்த டெண்டுல்கரின் எண்ணம் வீணாகி விட்டது. ஆரம்பத்துடுப்பாட்ட வீரர்களாக ஷேவாக்கும் ஆகாஷ் ஷோப்ராவும் களமிறங்குவார்களென இந்திய கிரிக்கெற் கட்டுப்பாட்டுச் சபை அறிவித்துள்ளது.

இதன் காரணமாக டெண்டுல்கரின் மனநிலை பாதிக்கப்பட்டுள்ளதால் காயத்தைக் காரணம்காட்டி அவர் பெங்களூர் போட்டியிலிருந்து விலகிக்கொள்ளக்கூடுமெனவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்திய அணியில் 3 சுழற்பந்து வீச்சாளர்கள் இடம்பெறுகிறார்கள். தசைப்பிடிப்பால் அவதிப்பட்டு தற்போது குணமாகியுள்ள சஹீர்கான் அணியில் இடம்பெறும் அதேவேளை, போதிய உடல் தகுதி இல்லாத காரணத்தால் அஷஸ் நெஹ்ரா அணியில் இடம்பெறவில்லை.

தமிழக வீரர் முரளி கார்த்திக் அணியில் இடம்பெறுகின்றபோதும் சகலதுறை ஆட்டக்காரரான ஸ்ரீராமுக்கு அணியில் இடமளிக்காதது கவலையானது. இடதுகை சுழற்பந்து வீச்சாளரான ஸ்ரீராம் இந்திய ஏ அணியில் அண்மைக்காலங்களில் சிறப்பாக விளையாடிய போதும், அவருக்கு அணியில் இடமளிககப்படவில்லை. இந்நிலை யில் கடந்த சில போட்டிகளில் மோசமாக விளையாடிவரும் ஷேவாக யுவராஜ்சிங், கைவ் ஆகியோருக்கு இடமளித்தது, பலரது மனதில் அணித்தேர்வு தொடர்பாக சந்தேகங்களை எழுப்பியுள்ளது.

தகுதியான புதிய வீரர்கள் பலர் இருந்தும் வழமையான அணியே தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

15பேர் கொண்ட இந்திய அணி வருமாறு: சௌரவ் கங்குலி(தலைவர்), ராகுல் டிராவிட் (துணைத் தலைவர்) சச்சின் டெண்டுல்கர், வீரேந்தா ஷேவாக், ஆகாஷ் சோப்ரா, வி.வி.எஸ். லக்ஷ்மன், யுவராஜ்சிங் முகமது கைவ் அனில்கும்ளே, ஹர்பஜன்சிங், பார்தா பட்டேல்(விக்கெற்காப்பாளர்), இர்பான் பதன், சஹீர்கான், அஜித அகார்கர், முரளி கார்த்திக் ஆகியோா. (க-7)

## நட்புறவு டெஸ்ட் ஹொக்கி பாகிஸ்தான் 2:1 என வெற்றி

இந்தியா, பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான 4ஆவது ஹொக்கி டெஸ்ட்போட்டி 4-4என வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

லாகூரில் கடந்த வெள்ளிக்கிழமை. நடைபெற்ற இந்த ஆட்டத்தில் ஒரு நிலையில் இந்தியா 4-2 என முன்னிலை பெற்றிருநதும் கடைசி நிமிடத்தில் வெற்றிவாய்ப்பை இழந்தது குறிப்பிடத்தக்கது.

ஆட்டம் முடிவடைய 2 நிமிடம் இருக்கையில ரேஹன் பட் அடித்த கோல் பாகிஸ்தானை 4-4 என சமன் பெறச்செய்தது.

இந்த ஆட்டமே அதற்கு முன்னதான ஆட்டங்களுக்கெல்லாம் சிறப்பானதாக அமைந்திருந்தது. மொத்தத்தில் தேசிய ஹொக்கி ஸ்டேடியத்தில் குழுமியிருந்த ரசிகர்களுக்கு விருந்துபடைத்திருந்தது.

ஆட்டத்தின் பாதி நேரத்தில் இரு அணிகளும் தலா ஒருகோல் அடித்திருந்தன. 14ஆவது நிமிடத்தில் சோஹைல் அப்பாஸ் பாகிஸ்தானுக்காகவும் அதற்கடுத்த நிமிடத்தில் விக்கிரம் பிள்ளை இந்தியாவுக்காகவும் அடித்த கோல்களால் இரு அணிகளும் முதல் பாதியில் சமநிலையில் இருந்தன.

பிற்பாதியில் சந்தீப் சிங் (40 ஆவது நிமிடம்) அர்ஜுன் ஹாலப்பா (49ஆவது நிமிடம) இக்நேஸ் திர்கே (51ஆவது நிமிடம்) ஆகியோர் இந்தியாவுக்காக கோல் அடித்தனர். பாகிஸ்தான் அணியில் சோஹைல் அப்பாஸ் (42ஆவது நிமிடம்), அக்தர் அலி (57ஆவது நிமிடம்), ரெஹன் பட் (68ஆவது நிமிடம்) ஆகியோர் கோல் அடித்தனர். இதையடுத்து பாகிஸ்தானில் நடைபெற்ற 4 போட்டிகள கொண்ட தொடரில் 2-1 என்ற முனனிலையில் பாகிஸ்தான் உள்ளது. அடுத்த கட்டமாக பாகிஸ்தான் அணி இந்தியாவில் பல்வேறு இடங்களில் 4 ஆட்டங்களில் விளையாட இருக்கிறது. (க-7)

# மாதவிலக்கின்போது ஏற்படும் வலிக்கு

## மருத்துவ விளக்கம்

# சிறந்த கவனிப்பு அவசியமானது

டாக்டர் எச்.கே.பாக்ரு

வலியுடன் கூடிய மாதவிலக்கு இந்நாட்களில் பெண்களிடையே வெகு சாதாரணமாகக் காணப் படுகிறது. மாதவிலக்கின்போது ஓரளவு வலி இருப்பது உண்டு தான. என்றாலும், தாங்கும் ஆற்றலை மீறி அதிகப்படும் வலி இருந்தால பெண்கள் உடனடியாக அதைக் கவனிக்கவும் தக்க சிகிச்சை அளிக்கவும் வேண்டும்.

பெண்களின் கருவகத்தில் இருந்து கருமுட்டை உருவாகி வெளியேறி கருப்பையை அடைந்து கருவுறுதலுக்குத் தயார் நிலையில் இருக்கும் நிலையுடன் மாதவிலக்குச் சுழற்சிக்குத் தொடர்பு உள்ளது. குறித்த காலத்தில் கருப்பையின உட்புறத்தை தூய்மைசெய்து, இன உற்பத்திக்கு வழிவகுப்பது இயற்கையின் முன் ஏற்பாடாக உள்ளது. மாதவிலக்குச் சுழற்சி பொதுவாக 28 நாட்களுக்கு ஒரு முறை நடைபெறுகிறது. நான்கு நாட்கள் மாதவிலக்கு நீடிக்கிறது.

### அறிகுறிகள்

இருவகை அறிகுறிகள் தோன்றுவது உண்டு. நேரடியாகக் கருபபையில் தோன்றுவது மாதவிலக்கின் போது ஏற்படும் வலி அல்லது கருப்பை தவிர்த்து வேறு ஏதேனும உறுப்பில் அல்லது திசுக்களில தோன்றுவது மாதவிலக்குடன் சேர்ந்து ஏற்படும் வலி.

உண்மையான மாதவிலக்கு வலி, மாதவிலக்கு ஆரம்பிக்கும் முதல் நாளில் தொடங்குகிறது. இவ்வலி பெருங்குடல் பகுதியில் அருகில் ஏற்படுகிறது. இன்னொரு வகை வலி மாதவிலக்கிற்கு சில நாட்களுககு முன்பே ஆரம்பித்து விடும். அல்லது வலிஅற்ற மாதவிலககு சுழற்றிக்குப் பின் தோன்றும். சுமார் 50 சதவீதப் பெண்களுக்கு இப்படிப் பட்டவலி மாதவிலக்கின் போது அடிவயிற்றுப் பகுதியில் தோன்றுவது வழக்கம்.

ஏற்ற உணவுப் பழக்கமின்மை ஏற்புடைய வாழ்க்கை முறையின்மை மற்றும் நரம்பு மண்டலச்சோர்வு நிலை ஆகியவற்றின் காரணமாக உடலில் குறிப்பாக இன உறுப்புக்களில் ஏற்படும் நச்சுத்தன்மையால் மாதவிலக்குச் சமயத்தில் வலி மிகுகிறது.

### சிகிச்சை

மாதவிலக்குக்கு இரண்டு அல்லது மூன்று நாட்களுக்கு முன் வலி தொடங்கினால், அனேகமாக கருவகங்கள் சரியான முறையில் இயங்கவில்லை என்று பொருள்படும். இது நாளங்கள் தொடர்பான கோளாறு, கவனமாகத திட்டமிட்டு அளிக்கப்படும் இயற்கை உணவுகள் இதை சரிசெய்வதுண்டு.

மாதவிலக்குக்குச் சற்று முன் வலி என்றால் அது கருப்பை வளைந்துள்ளதால் என்று கூறலாம். இதன் பொருள் - கருப்பையின் இருப்பு நிலை இயல்புக்கு மாறாகவுள்ளது என்பதே கருப்பையின் இருப்பு நிலைபற்றி மருத்துவச் சோதனை மேற்கொண்டு அறிந்து, சரிசெய்ய மருத்துவ நிபுணரின் ஆலோசனைப்படி ஏற்ற உடற்பயிற்சிகளைச்செய்யவேண்டும். மிக மெலிந்த உடல்வாகுள்ள பெணகளிடம் கருப்பை வளைவு மிக அதிகமாகக் காணப்படுகிறது. அவர்கள் உடலின உள்ளுறுப்புக்களில் போதுமான கொழுப்புத் திசுகள் இருப்பதில்லை. கருப்பையைத் தாங்கிய தசைத்தளைகள் பலவீனமடைந்துள்ளன. பொதுவான சிகிச்சையுடன் சரியான உணவுத் திட்டமும் இக்கோளாறைச் சரிசெய்யும் உடற்பயிற்சியும் அவசியம்.

மாதவிலக்கின்போது வலி உணடானால் கருப்பையில் அழற்ச்சி ஏற்பட்டிருக்கலாம். சரியான உணவு முறையைப் பின்பற்றுவதன் மூலமும் மாதவிலக்கிற்குச் சற்று முன் சுடான இடுப்புக் குளியலும் இடைப்பட்ட நாட்களில் குளிர்ந்த இடுப்புக் குளியலும் தருவதன் மூலமும் இக்கோளாறில் இருந்துவிடுபடலாம்.

### உணவுமுறை

வலியுடன கூடிய மாதவிலக்குக் கோளாறுக்கான சிகிச்சையின் உணவு முறை ஒரு முக்கிய பங்கு வகிக்கிறது. வலி வந்துதுன்புறும் பெண்கள் அன்று முதல் 5 நாட்கள் முழுவதும் பல உணவுகளையே உண்ணத் தொடங்கவேண்டும்.

நாளொன்றுக்கு 3 வேளைகள அப்பில், திராட்சை, பப்பாளி, ஆரஞ்சு, அன்னாசி போன்ற சாறு செறிந்த புத்தம் புதிய பழங்களை உட்கொள்ள்வேண்டும். வேறு எந்த உணவுப் பொருட்களையும் உண்ணக் கூடாது. இல்லையேல் சிகிச்சையின் பலன் கிட்டாது.

இருந்தபோதிலும் பழ உணவுகளால் எடை இழப்பு அதிகமாக நேரிடுமானால் ஏற்கனவே உடல் எடை குறைந்த பெண்கள் ஒவ்வொரு வேளை பழ உணவுடன் ஒரு தம்ளர் பாலையும் பருகவேணடும். இந்தக் காலகட்டத்தில் வெதுவெதுப்பான நீர் எனிமாவால் குடல் பகுதி நாள் தோறும் தூய்மை செய்யப்படவேண்டும்.

முழுப்பழ உணவு நாட்கள் முடிந்த பிறகு பின்வருமாறு ஒரு சமச்சீருணவு உட்கொள்வதைத் தொடங்க வேண்டும்.

காலையில் எழுந்ததும் அரை எலுமிச்சை பழச்சாறும் ஒரு தேக்கரணடி தேனும் கலந்த ஒரு டம்ளர் வெதுவெதுப்பான நீர் அருந்தவேண்டும்.

காலை உணவு:- அப்பிள், ஆரஞ்சு, திராட்சை, பப்பாளி, மாம்பழம், வாழைப்பழம் போன்ற பழங்களுடன் பால்.

பகல் உணவு :- ஒரு கிண்ணம் நிறைய ஆவியில் வேகவைக்கப்பட்ட கரட், முட்டைக்கோசு, காலி∴பிளவர் மற்றும் பீன்ஸ் போன்ற காய்கறிகள் இரண்டு மூன்று தவிடு நீக்காத சப்பாத்தி, ஒரு தம்ளர் மோர்.

முன் மாலை: ஒரு தம்ளர் கரட் சாறு அல்லது கரும்புச் சாறு.

இரவு உணவு :- பெரிய கிண்ணம் நிறைய புத்தம் புதிய காய் கறி சலாட், கரட், முட்டைகோசு, வெள்ளரி, தக்காளி, முள்ளங்கி, பீட்ரூட், முளை கட்டிய பச்சைப் பயறு, வெங்காயம் போன்ற கிடைக்கும் காய்கறிகளைக் கொண்டு இதைத் தயாரிக்கலாம்.

படுக்கை நேரம் :- ஒரு டம்ளர் பால் அல்லது ஒரு அப்பிள்.

உணவுமுறைக் காரணி கிட்டத்தட்ட மிக முக்கியம் பழங்களுமசலாடுகளும் உடலைத் தூய்மை செய்யும, உடல்நலத்தை மீட்டுத் தரும் இயற்கை உணவுகள் மற்றும வித்துக்கள் முழுத்தானியங்கள் ஆகியவற்றை முளைக்கட்டி உபயோகிக்கவேண்டும். மாதவிலக்கின் போது இரத்தச் சர்க்கரை அளவு மிகவும் தாழ்ந்து போய்விடுவது வழக்கம்.இதனைத தடுக்க ஒன்று, இரண்டு முறைகள அதிகமாகச் சாப்பிடுவதைவிட அடிக்கடி சிறு அளவுகளில் சாப்பிட்டுவரவேண்டும். தவிடு நீக்கிய மாவு கொண்டு செய்த உணவுகள் சர்க்கரை இனிப்புப் பண்டங்கள், கேக்குகள், பசை உணவுகள், செயற்கை உணவுகள், தீட்டப் பட்ட தானிய வகைகள், இறைச்சி உணவுகள், கொழுப்புச் செறிந்த மிகுந்த அல்லது எண்ணெய்ச் சத்து மிகுந்த உணவுகள், கஷாயம் மிகுந்த தேநீர் , ஊறுகாய், மசாலாக்கள், காரசாரமான உணவுகள் ஆகியவற்றைத் தவிர்க்கவும். புகைக்கும் பழக்கமுடைய பெண்கள் அதை முற்றிலும் ீகவிடவேண்டும். ஏனெனில், அது மாதவிலக்குக் கோளாறுகளை மேலும் கேடாக்கும்.

மாதந்தோறும் ஒருமுறை இரண்டு அல்லது மூன்று நாட்கள் முழுப் பழஉணவுகளை உற்கொள்வது நல்லது.

வலியுடன கூடிய மாதவிலக்குக் கோளாறுக்கான சிகிச்சையில் சில வீட்டு உபயோக சிகிச்சை முறைகள் பயனுள்ளவை. அவற்றுள் ஒன்று சமைத்த வாழைப்பழ மாவு, இத்துடன தயிர் சேர்த்து உண்ண வேண்டும். இது புரோஜெஸ்டிரோன் ஹார் மோனை (**Progestrone Hormone**) அதிகரிப்பதாகத் தோன்றுகிறது. இந்தக் ஹார்மோன் மாதவிலக்கை ஒழுங்கு செய்யக் கூடியது. இன்னொரு நிவாரணி எள். அரைத்தேக் கரண்டி எள்ளை மென்று சாப்பிட்டுவிட்டு வென்னீர் அருந்த வேண்டும். நாள் ஒன்றுக்கு இரண்டு முறைகள் இவ்வாறு செய்து வந்தால் மாதவிலக்குச் சமயத்தில் நேரிடும் வலி பெருமளவு குறைந்து விடும்.

பெண்கள் மாதவிலக்கின் போதும் அதன் பிறகும் உடல் வளைத்து எந்த வேலையையும் செய்து வரவேண்டும். சில யோகாசனப் பயிற்சிகளையும் செய்யலாம. அவற்றைத் தக்க ஆசான்களின் வாயிலாக அறிந்து செய்வது சிறப்பு. ஆசனங்களால் கருப்பையுடன் தொடர்புடைய உறுப்புக்களுக்கு ஓய்வு கிடைக்கும். அழறசிக்கோளாறுகளிலிருந்து விடுதலைகிடைக்கிறது. வலியெடுக்கும் போது பெண்கள் போதுமான ஓய்வெடுக்கவும் வேண்டும். மனஇறுக்கங்களுக்கு ஆளாகாமல உற்சாகமாக இருப்பதும் அவசியம். □

---

# மிதிவெடிகளை அகற்றுவதற்கான சர்வதேச நிதியுதவிகளைத் தொடர்ந்தும் பெறுவதில் தாமதம்

## மட்டு. தமிழர் புனர்வாழ்வுக் கழகம் தெரிவிப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் புதைக்கப்பட்டுள்ள மிதிவெடிகளை அகற்றுவதற்காக உதவி வழங்க முன்வந்துள்ள நாடுகளின் நிதி உதவியைத் தொடர்ந்து பெறுவதில் தாமதங்கள் ஏற்பட்டுள்ளதாக தமிழர் புனர்வாழ்வுக் கழகம் தெரிவிக்கின்றது.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின மட்டக்களப்பு மாவட்ட அலுவலகத்தல் நேற்றுமுன்தினம் நடைபெற்ற செய்தியாளா மாநாட்டில் இந்தத ககவலை மாவட்ட பணிபபா[illegible] கு.தேவராஜா வெளியிட்டுள்ளார்.

அங்கு அவர் தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில் 'மக்' நிறுவனத்தின் தொழில்நுட்ப உதவியுடன் தற்போது மிதிவெடி அகற்றும் பணிகள் மேற்கொள்ள[illegible]பட்டு வருகின்றன. 63 உள்ளூர் பணியாளர்கள் இந்த பணியில் ஈடுபட்டுள்ளனர். மட்டக்களப்பு மாவட்டத்தில் 57 இடங்களில் மிதிவெடிகள் புதைக்கப்பட்டிருப்பதாகத் தெரிய வருகின்றது. இருந்த போதிலும் 38 இடங்கள் இதுவரை அடையாளம் காணப்பட்டுள்ளன.

பாலையடிவட்டை, வெல்லாவெளி மற்றும் புல்லுமலை ஆகிய இடங்களில் இந்த பணி பூர்த்தியடையும் தறுவாயை அடைந்துள்ளது. அடுத்த கட்டமாக ஆயித்தியமலை மற்றும் ஓமடியாமடு ஆகிய இடங்களில் இப் பணியை ஆரம்பிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

ஜப்பான், நோர்வே ஆகிய நாடுகள் இந்த பணிக்கு உதவி வருகின்ற போதிலும், அதன் நிதி உதவிகளைப் பெறுவதில் தாமதங்கள் ஏற்படுகின்றன எனக் குறிப்பிட்டார். (ற-8)

### புதிய உறுப்பினர்கள் தெரிவு

(பருத்தித்துறை)

புலோலி பலநோக்குக் கூட்டுறவுச சங்க இயக்குநர் சபைத் தலைவராக ப.நோ.கூ. சங்கத்தின் முன்னாள் பொது முகாமையாளர். ஐ.எம்.ராமச்சந்திரன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

உபதலைவராக பீ.ஆறுமுகநாதனும் இயக்குநர் சபை உறுப்பினர்களாக எம்.தம்மையா, எஸ்.குகன், எஸ்.சிவபாதசுந்தரம், பீ.திருச்செல்வம் மற்றும் வி.இரவீந்திரன் ஆகியோரும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். (ற-52)

---

# பொதுமக்கள் விசனம்

(சாவகச்சேரி)

கடந்த 1990 ஆம்ஆண்டு இடம் பெற்ற யுத்தத்தின் போது சேதமடைந்த வேலணை பிரதேச சபையின் அல்லைப்பிட்டி உப அலுவலகம் மற்றும் பொது நூலகம் என்பன மீண்டும் இயங்காததையிட்டு பொது மக்கள் பெரிதும் விசனம் தெரிவிக்கின்றனர்.

மேற்படி கட்டடத்தைத் திருத்தி அமைத்து மாணவர்களுக்கும், பொது மக்களுக்கும் வசதிகளை செய்து தரும்படி வேலணை பிரதேச செயலரிடம் பலமுறை வேண்டுகோள் விடுவிக்கப்பட்ட போதும், இது குறித்து எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

இந்நிலையில், பொது நூலகத்தை எனினும் உடனடியாக ஆரம்பிக்கும்படி பொதுமக்கள் தரப்பில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.(ற-29)

---

# சம்பள அதிகரிப்புக்கோரி ஹற்றனில் தோட்டத்தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

தோட்டத் தொழிலாளர்களுக்கு நியாயமான சம்பள உயர்வு



வழங்கப்படவேண்டுமென்ற கோரிக்கை உட்பட 3 கோரிக்கைகளை முன்வைத்து நேற்று முன் தினம் ஹற்றன் நகரில் மாபெரும் ஆர்ப்பாட்டப பேரணியொன்று நடாத்தப்பட்டுள்ளது.

தோட்டத்தொழிலாளர்களின் சம்பள உயர்வு உட்பட அரசியல் உரிமைகள் பற்றி அரசாங்கம் கவனம் செலுத்தவேண்டுமென்று வலியுறுத்தி பெருமளவாக தோட்டத்தொழிலாளர்கள் இப் பேரணியில் கலந்து கொண்டு அரசுக்கு எதிராகக் கோஷம் எழுப்பினர்.

மலையக மக்கள் முன்னணித் தலைவர் பெ.சந்திரசேகரன் தலைமையில் நடைபெற்ற இவ் ஆர்ப்பாட்டப் பேரணியின் முடிவில் கருத்து வெளியிட்ட அவர்,

மலையகத்தில் உள்ள தோட்டங்களில் சுமார் 2 இலட்சத்திற்கும் மேற்பட்ட தோட்டத் தொழிலாளர்கள் பணியாற்றுகின்றனர்.

இலங்கைக்கு நாள் ஒன்றுக்கு 141 ரூபா மட்டுமே சம்பளமாக வழங்கப்படுகின்றது. இன்று நாட்டில அதிகரித்துச் செல்லும் வாழ்க்கைச் செலவுடன் ஒப்பிடும் போது, இச் சம்பளம் போதாது.

எனவே, தோட்டத்தொழிலாளர்களின் சம்பளம் நாளொன்றுக்கு 207 ரூபாவாக உயர்த்தப்பட வேண்டும எனக் குறிப்பிட்டார். (ற-8)

# ஈரானிலிருந்து இறக்குமதி செய்த கழிவு இரும்புகளுள் வெடிகுண்டுகள்

## தவறுதலாக கையாண்ட 10பேர் பலி

இந்தியாவில் உள்ள உருக்கு இரும்பு உற்பத்தி நிறுவனத்தால் ஈரானில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட கழிவு இரும்புகளினை கையாண்டபோது அதனுள் இருந்த குண்டுகள் வெடித்துச் சிதறியதில் இந்திய நிறுவனத்தின் ஊழியர்கள் 10பேர் பலியாகியுள்ளனர்.

இதனையடுத்து, இராணுவத்தைச் சேர்ந்த வெடிகுண்டு நிபுணர்களும் தேசியப் பாதுகாப்புப் படையினரும் கனா உபாவன் என்ற இடத்தில் உள்ள அந்த நிறவனத தின் கழிவு இரும்புப் பொருள் கிடங்குக்குச் சென்று சோதனை நடத்தினர்.

அதில் பலதரப்பட்ட வெடிக்காத "ஷெல்" குண்டுகள் கண்டுபிடிக்கப்பட்டன.

அததுடன், ஈரானிலிருநது கழிவு இரும்புப் பொருட்களை ஏற்றிவந்த 200 லோரிகள் ஒவ்வொன்றும் அரை கிலோ மீட்டர் தூர இடைவெளி விட்டுத் தனித்தனியே நிறுத்தி வைக்கப்பட்டு அவை மீது சோதனை நட வடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அக் கழிவு இரும்புப் பொருடகளை மிகக கவனத்துடன் சோதனையிட வேண்டியுள் ளது. எனவே, முழுமையாகச் சோதனை நடத்தி முடிக்க சில நாட்கள் ஆகும் என்று அச் சோதனைப் பணியைக் கண்காணிக் கும் இராணவ அதிகாரியான மேஜர் சுக்வந்த் சிங் கூறினார்.

(ப)



பெலஜய நாட்டு அரசினால் ஐரோபபிய நாடுகளுக்கு அடிக்கடி பயணம் செய்யும் நாய்கள், பு,னைகள் போனற விலங்குகளுகக்கு பாஸ்போர்ட வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறு பெல்ஜியத்தைச் சேர்ந்த நாய் ஒன்று ஐரோப்பிய நாடுசெல்வதற்கான தனது பார்ஸ்போாட்டுடன் உலாவருவதை படத்தில் காணலாம்

# சீனாவில் புதிய தங்கச் சுரங்கம்

(பெய்ஜிங்)

சீன வட மேற்கு பகுதியின் கன்சு மாகாணத்தில் பெருமளவு தங்கக் கனிமம் இருப்பதை சீனக் காவல்படைப் பிரிவு கண்டுபிடித்துள்ளது.

யங்ஷன் சுரங்கப் பகுதியில், 288சதுர கி.மி. பரப்பளவில், 66 இடங்களில் தங்கக் கனிமம் இருப்பதை, அவர்கள் கண்டுபிடித்தனர்.

அங்கு 156தொன் தங்கம் கிடைக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இதன் மதிப்பு 181 கோடி அமெரிக்க டொலர் எனவும் இதனைத் தோண்டி எடுக்கும் பணிகள் விரைவில் ஆரம்பமாகும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ப)




அமெரிக்காவில் நாய்கள் தொடர்பான விடயங்களுகாக பத்திரிகை ஒன்று நடத்தப்படுகிறது. இதில் நாய்கள் பற்றிய ஜோதிடம் மற்றும் நாய்களை வளர்ப்பதற்கான ஜோதிடக்குறிப்புகள் என்பவும் உண்டு. இருமாதங்களுக்கு ஒரு தடவை வெளிவரும் இப் பத்திரிகையின் இம் மாத வெளியீட்டின் முன்பக்கக் காட்சியிது.

# பெண்கடத்தல் கும்பலின் தலைவர்களுக்கு மரணதண்டனை

(ஷாய்காய்)

சீனாவில் குழந்தைகள் மற்றும் பெண் களைக் கடத்திச்சென்று விற்று வந்த 36 பேர் அடங்கிய கும்பலில் இரணடு பேருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

சீனாவில் குழந்தைகள் மற்றும் பெணகளைக் கடத்திச்சென்று விற்பது சகஜமாக உள்ளது. இங்குள்ள யுனான் மாகாணத்தில் கடந்த 12ஆண்டுகளாக பெண்கள் மற்றும் குழந்தைகளைக் கடத்தி விற்று வநத 36பேர் கொணட கும்பலை சனப் பொலிஸார் கைதுசெய்தனர்.

இவர்கள் மீதான வழக்கில் நேற்று முன்தினம் தீர்ப்புக் கூறப்பட்டது. கடத்தல் கும்பலின் தலைவர்கள் இரண்டு பேருக்கு மரண தண்டனையும், மற்றவர்களுக்கு ஆயுள் தண்டனையும் வழங்கப்பட்டுள்ளது.

முதலாவது நபர் 12பெண்கள் மற்றும் 13குழந்தைகளைக் கடத்திச்சென்று விற்ற வர். மற்றொரு நபர் 23பெண்களைக கடததிச் சென்று விற்பனை செய்தவர். மொத்தம் 74பெண்களை இந்தக் கும்பல் கடத்திச் சென்று விற்றுள்ளது.


(ப)

# அமெரிக்காவின் ஹெலன்ஸ் எரிமலை

## 18 ஆண்டுகளின் பின் குமுறும் அபாயம்

(வாஷிங்டன்)

அமெரிக்காவில் உள்ள செயின்ட்



ஹெலன்ஸ் எரிமலை விரைவில் குமுறும் என புவியியல் வல்லுநாகள் தெரிவித்துள்ளனர்.

அமெரிக்காவில் சியாட்டின் தெற்குப் பகுதியின் செயின்ட்ஹெலன்ஸ் எரிமலை உள்ளது.

கடந்த 1980ம் ஆண்டில் இந்த எரிமலை வெடித்ததில் 200வீடுகள் தீக் குழம்பால் மூழ்கடிக்கப்பட்டன. 57 பேர் பலியாயினர்.

பின்னர் கடந்த 1986ம் ஆண்டு மீண்டும் இந்த எரிமலை வெடித்தது. ஆனால், அப்போது பெரிய அளவில் பாதிப்பு ஏற்பட வில்லை.

இந்நிலையில் தற்போது செயின்ட் ஹெலன்ஸ் பகுதியில் மூன்று நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. இதனால், இந்த எரிமலை வெடிக்கும் சூழல் உருவாகியுள்ளதாக, புவியியல் வல்லுநர்கள் எச்சரித்துள்ளனர்.

இதன் காரணமாக, இப்பகுதியில் வசிக்கும் 2ஆயிரத்துக்கும் அதிகமான மக்கள் பாதுகாப்பான இடங்களில் குடியமர்த்தப்பட்டுள்ளனர். (ப)

# பிராணிகள் பேரணி

(மணிலா)

பிலிபபைன்ஸ் நாட்டில் ஆணடு தோறும் ஒக்டோபர் மாதம 2ஆம் திகதி இடமபெறும் செல்லப் பிராணிகள் பேரணி இம்முறை பிலிப்பைன்ஸிலுள்ள மணிலாவில் இடம் பெற்றது.

மணிலாவில் பிரான்ஸ்ஸிஸ் எனும் பாதிரியார் நினைவாகக் கட்டப்பட்டுள்ள தேவாலயத்தில் அவர் பெரிதும் நேசிக்கும் செலலப பிராணிகளின் பேரணியும் ஆசீாவாதம வழஙகும் நிகழ்வும ஆணடுதோறும் இடம் பெறுவது வழக்கம்.

எனினும் இம்முறை மிக விததியாசமாக இடம பெறற பிராணிகள பேரணியில வழக கத்தறகு மாறாக பலலி, எலி, பட்டுபபு,ச்சிகள், புழுக்கள் எனபனவும் பங்கு பற்றின.

இதில் லட்சக்கணக்கான செல்லப் பிராணிகள் ஊர்வலமாக அழைதது்ச் செல்லப்பட் டன. இவ்வாறாக அழைத்துச் செல்லப்பட்ட பிராணிகளுக்கு ஆசீர்வாதங்களும் வழங்கப் பெற்றன.

(ப)

# பங்களாதேஷில் ஆந்திரெக்ஸ் தடுப்பு நடவடிக்கைகள் தீவிரம்

(பக்தாத்)

ஆந்திரெகஸ் நோய் பரவாமல் தடுக்கும் நடவடிக்கைகளில் பங்களாதேஷ் தீவிரமாக ஈடுபட்டுள்ளது.

உயிர்கொல்லி ஆந்திரெக்ஸ் பங்களாதேஷில் மிக வேகமாக பரவி வருகிறது. அங்கு தலைநகர் டாக்காவுக்கு அருகே தென் கிழககுப் பகுதியில் பந்தர்பான் என்ற மலைப் பிரதேச நகரில் யானை ஒனறு ஆந்திரெக்ஸ் நோய் தாக்கி இறந்தது.

ஆந்திரெக்ஸ் நோய் பரவாமல் தடுக்க பங்களாதேஷ் அரசு தீவிர நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. தெனகிழக்கு பகுதிகளுக்கு ஆந்திரெக்ஸ் நோய் தடுப்பு மருந்துகளை அனுப்பி வைத்துள்ளது.

இது குறித்து சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சர் தாரிகுல்இஸ்லாம் கூறுகையில், பந்தர்பான் மற்றும் அதனை சுறறியுள்ள பகுதிகளில் விலங்குகள் மூலம் இந்நோய் பரவாமல தடுக்க அங்கு வன விலங்குகள் மற்றும் வீடுகளில் வளர்க் கபபடும் பிராணிகளுக்கு தடுப்பு மருந்துகள் அளிககும் நடவடிககையை அரசு தவிரமாக மேறகொண்டு வருகிறது என்றார். (ப)



அமெரிக்காவில் வசிக்கும் இந்தியப் பெண்களிடையே நடததப்பட்ட "மிஸ் இந்தியா - யு.எஸ்.ஏ-2004" போட்டியில் பங்கேற்க அமெரிக்காவின் நியு,ஜெர்சி நகரில் கூடிய அழகிகளைப் படத்தில் காணலாம்.

# வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின்


## 2004 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்றோரை பாராட்டி வாழ்த்துகின்றோம்



கோடீஸ்வரன் - குணாநிதி
தம்பதிகளின செல்வப் புதல்வி
**கஜேந்தினி**
புள்ளிகள்:- 168
சுழிபுரம் மேற்கு, சுழிபுரம்.
மாவட்ட நிலை 11




கணேசன் - கங்கா தம்பதிகளின்
செல்வப் புதல்வி
**அனுஷா**
புள்ளிகள்:- 161
தொல்புரம் மேற்கு,
தொல்புரம்.



ரூபன்- மலர்விழி
தம்பதிகளின செல்வப் புதல்வன்
**சயிந்தன்**
புள்ளிகள்:- 145
வட்டு மேற்கு,
வட்டுக்கோட்டை.



பரமேஸ்வரன் - மாலா
தம்பதிகளின செல்வப் புதல்வன்
**சதுர்வேதன்**
புள்ளிகள்:- 140
வட்டு மேற்கு,
வட்டுக்கோட்டை.



சத்தியசீலன்- சந்திரவதனா
தம்பதிகளின செல்வப் புதல்வன்
**லவன்**
புள்ளிகள்:- 140
ஆலோலை ஒழுங்கை,
வட்டுக்கோட்டை.



யோகராஜா - தவராணி
தம்பதிகளின செல்வப் புதல்வி
**தேனுகா**
புள்ளிகள்:- 137
சுழிபுரம் தெற்கு,
சுழிபுரம்.



தர்மராஜன்- முத்தீஸ்வரி
தம்பதிகளின செல்வப் புதல்வி
**கலாநிதி**
புள்ளிகள்:- 135
பறாளை வீதி,
சுழிபுரம்.



குமாரராஜன் -செல்வமனோகரி
தம்பதிகளின செல்வப் புதல்வி
**மேகலவாணி**
புள்ளிகள்:- 132
வட்டு மேற்கு,
வட்டுக்கோட்டை.



சுந்தர்லிங்கம்- நாகேஸ்வரி
தம்பதிகளின் செல்வப் புதல்வன
**பவித்திரன்**
புள்ளிகள்:-129
வட்டு மேற்கு,
வட்டுக்கோட்டை



ஜெயகாந்தன்- சுதா
தம்பதிகளின செல்வப் புதல்வி
**அபிராமி**
புள்ளிகள்:-126
வட்டு மேற்கு,
வட்டுக்கோட்டை.

இவர்கள் சித்தி பெற ஊக்கமளித்த அதிபர், மேற்பார்வையாளர்,
ஆசிரியர்கள் அனைவரையும் நன்றியுடன் வாழ்த்துகின்றோம்.

**பாராட்டுபவர்கள் பெற்றோர்கள்**

(C/607)

அமைப்பு: R.U. பாலமுருகன்
படங்கள்:- V. நிருபரன்
N. தனுஷன்

# மழலைப் பேற்றுக்கு

உலக அளவில் மக்கள் தொகைப் பெருக்கம் ஒரு மாபெரும் பொருளாதார சமூகப் பிரச்சினையாக உருவெடுத்திருக்கிறது. அதனால் ஒரு பக்கம் குடும்பக் கட்டுப்பாட்டிற்காக எத்தனையோ முயற்சிகள்...! மறுபக்கம் [illegible]யில்லாதவர்களின் அ[illegible]தை இது சாதாரணமாக சகித்துக்கொள்ளக் கூடியதல்ல. சராசரியாக 15வீத மக்கள் குழந்தையில்லாமல்த் தவிக்கிறார்கள்.

இந்த அவஸ்தைக்கான மூல காரணம் கர்ப்பப்பையிலேயே தொடங்குகிறது. பிறந்தது ஆண் குழந்தையாயினும் பெண்குழந்தையாயினும் மருத்துவர்கள் குழந்தையை முழுமையாகப் பரிசோதிப்பார்கள். அங்க அபயங்கள் முழுமையாக வளர்ச்சியடைந்திருக்கிறதா என்று பரிசோதித்து ஏதாவது குறையிருந்தால் தீவிரமாக ஆராய்வார்கள். குழந்தை கர்ப்பப்பையில் வளரும்போதே அதாவது 8,9ஆவது வாரத்திலேயே ஆண் குழந்தைக்கான விதைப்பை வளரத்தொடங்கிவிடும். பிரவசத்தின்போது வயிற்றில் இருக்கும் விதைப்பை தானாக தனது இருப்பிடத்திற்கு இறங்கிவிடும்.

ஒருசில குழந்தைகளுக்கு தொடையும் இடுப்பும் இணையும் பகுதியில் விதைப்பை தேங்கிவிட வாய்ப்பு உண்டு. அப்படி இடையில் தங்கிவிட்டால் விந்து உற்பத்தியே இல்லாமல் போகலாம். பொதுவாக உடல் வெப்பம் 37 பாகை இருக்க வேண்டும் சாதாரண உடல் வெப்பத்தைவிட 2பாகை முதல் 4 பாகைவரை குறைவாக இருந்தால்தான் விந்து உற்பத்தி நடக்கும். அதனால்தான் விதைப்பை மட்டும் உடலோடு ஒட்டாமல் தனியாகத் தொங்குகிறது. இடையிலேயே தங்கும் விதையைக் கீழே இறக்க சிகிச்சை எடுத்துக்கொள்ளாமல் தள்ளிப்போட்டால் நாளடைவில் அது புற்றுநோயாகக்கூட மாறலாம். பிறந்தவுடன் கவனித்துவிட்டால் மருந்து மாத்திரையிலேயே கூட விதையைக் கீழே இறக்கி

# மகத்தான யோசனைகள்

விடலாம். எளிய சிகிச்சையாக மாறிவிடும். இதைத்தவிர சில தொந்தரவுகள் விதைப்பையில் வர வாய்ப்புண்டு. எதிர்பாராத விதத்தில் சற்றும் எதிர்பார்க்காத நேரத்தில் விதைகள் திரிகிக் கொள்ளலாம். அப்படித் திருகிப் பட்டுவிட்டால் இரத்தக்குழாய்கள் அடைபட்டு சேதமடையலாம். அல்லது சிறிதாகிவிடலாம். தவிர்க்கமுடியாமல் அறுவைச் சிகிச்சை செய்து எடுக்கவேண்டிய நிலை கூட வரலாம். எதற்கும் மருத்துவரை நாடுவதுதான் முக்கியம். தட்டம்மை, புட்டாலம்மை வந்தாலும் வைரஸ், விந்து உற்பத்தியாகமால் செயல்களை அழித்துவிடும். இந்தியா போன்ற வளரும நாடுகளில் தான் இத்தகைய பாதிப்புக்கள் அதிகம். குழந்தைக்குத் தடுப்பூசி போட்டுவிட்டால் இது போன்ற பிரச்சினைகளில் இருந்து தப்பிவிடலாம். ஒருவேளை அம்மை வந்துவிட்டாலும் அதற்காக அஞ்சத்தேவையில்லை. மருத்துவரை நாடி சிகிச்சை பெறவேண்டும்.

சபலத்தோடு சுபம் தேடுபவர்களுக்கு ஆண்களுக்கு மட்டுமல்ல பெண்களுக்கும் பிரச்சினை வரும் பால்வினை நோய்கள் பாடாய்ப் படுத்தும் என்பதைவிட அப்பா, அம்மா ஆகும் தகுதியையும் தட்டிப்பறிக்கும். அதிலும் கொனோரியா ஏற்பட்டால் விந்துக்குழாயில் அடைப்பை உண்டாக்கும். கிளாமைடியா கருக்குழாயை பாதிக்கும். எதற்கும் வரும் முன் தடுப்பதே சிறந்தது. சுயத்தை வெல்ல முடியாமல் அலைபாய் வாகள் குறைந்த பட்சம் ஆணுறையாவது அணிந்துகொள்ளவேண்டும். தவறிப்போய் வந்துவிட்டாலும் வெட்கப்படாமல் முழுமையாக மருத்துவ சிகிச்சை எடுத்துக்கொள்ள வேண்டும்.

கிரிக்கெற் விளையாடும்போது பந்து படுவதாலோ அல்லது வேறு ஏதாவது காரணத்தால் விந்துப்பை காயமடையலாம். சிலருக்கு விந்துக்குழாய்கள் சுருங்கி இரத்தம் தேங்கலாம். கேட்மியம், பாதரசம், காரியம் போன்றவற்றைக் கையாள்பவர்கள் வெல்டிங் தொழில்செய்பவர்கள், விவசாயிகளாக இருந்து பூச்சிமருந்து தெளிக்கிறவர்கள் ஆகியோருககு விந்துப்பை பாதிப்பு ஏற்பட வாய்ப்புண்டு. சில மருந்துகள் காரணமாகவும் குறிப்பாக புற்றுநோய் மருந்துகள் பிரச்சினையை உண்டாக்கலாம். புற்றுநோயக்கு சிகிச்சை எடுக்கும் முன்பே விந்தை விந்துவங்கியில் சேமித்து வைத்துவிட்டு சிகிச்சை எடுத்துக் கொள்வது பாதுகாப்பானது.

காப்பர் டி-உபயோகப்படுத்தும் பெண்களுக்கு தொற்றுப்பாதிப்பால் தடை வரலாம். சிறுநீரகக் கற்கள் காரணமாக அறுவைச்சிகிச்சை செய்துகொண்ட பெண்களுக்கும் கருக்குழாயில் அடைப்பு ஏற்படலாம். கசநோயக்கு ஆளான ஆணுக்கும் பெண்ணுக்கும் கூட தடை வரலாம் மேற்சொன்ன தடைகளைக் கண்டுபிடித்து தக்க மருத்துவத்தை மேற்கொணடால் வீட்டில் மழலைச் சததம் இதமாகக் கேட்கும். வாரிசு இல்லை என்ற கவலையும் தீரும்.

**டாக்டர் டி. காமராஜ்**

## ஆசிரியர் தின விழா

(கோப்பாய்)

கோப்பாய் நாவலர் வித்தியாலயத்தின் ஆசிரியர் தின விழா நாளை புதன்கிழமை காலை 10 மணியளவில் பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர் கா.சந்திரலிங்கம் தலைமையில் பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில பிரதமவிருந்தினராக பழைய மாணவனும் சமூக சேவையாளருமான கையிலாய பிள்ளை வேலாயுதபிள்ளை கலந்து கொள்ளவுள்ளார்.

(ற-79)

## மட்டக்களப்பில் வெடிபொருள் அழிப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு-பொலநறுவை மாவட்ட எல்லைக் கிராமம் ஒன்றில் கைவிடப்பட்ட நிலையில் ஒரு தொகுதி வெடிப்பொருடகள் கண்டு பிடிக்கப்பட்டு நேற்று முன்தினம் மாலை செயலிழக்கப்பட்டது.

பொது மக்களிடம் இருந்து கிடைத்த தகவலையடுத்து தமிழர் புனர்வாழ்வுக்கழகம், 'மக்' நிறுவன தொழில்நுட்ப வழிகாட்டலுடன் இந்த வெடிபொருளை செயலிழககச்செய்தது. ஆர்.பி.ஜி. மோட்டார்கள், கிளைமோர்கள் மற்றும் கைக்குண்டுகள் எனப் பல வெடிபொருட்கள் பழுதடைந்த நிலையில் இருப்பதாக தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். (ச)

## கோண்டாவில், இணுவில் பகுதிகளில் ஒரேநாளில் திருடர் கைவரிசை

(கோண்டாவில்)

கோண்டாவில், இணுவில் பகுதிகளில் ஒரே நாளில் பல இடங்களில் திருடர் கைவரிசை இடம் பெற்றுள்ளது.

கடந்த சனிக்கிழமையே நள்ளிரவு கோண்டாவில், இணுவில் ஆகிய பகுதிகளில் திருடர்கள் தம் கைவரிசையைக் காட்டியுள்ளனர்.

கோண்டாவில் வடக்கு தில்லையம்பதி ஆலயத்திற்கு இரவு 3.30மணியளவில் வானில் வந்த கோஷ்டி ஒன்று வாகனத்தை கோயில் அருகே நிறுத்திவிட்டு அதன் மீது ஏறி உட்சென்று போலித்திறப்புக்களால் சகல கதவுகளையும் திறந்து சுமா ஐந்து இலட்சம் ரூபா பெறுமதியான பொருட்களை திருடியுள்ளது.

அதேவேளை, கோண்டாவில் எம்.எஸ்.லேன் பகுதியில் உள்ள ஞானவைரவர் ஆலயம், கோண்டாவில் கிழக்கு பாதாளவைரவர் ஆலயம், மற்றும் இணுவில் பருத்தியடைப்பு செகராச சேகரபபிள்ளையார் ஆலயம் ஆகியவற்றிலும் விநாயகா, அம்மன், முருகன் விக்கிரகங்கள் களவாடப்பட்டுள்ளன.

அத்துடன் அன்றைய தினமே கோண்டாவில் மேற்கு நெட்டிலிப்பாய் பகுதியில் உள்ள ஐயம்பிள்ளை தங்க நாயகி என்பவருடைய வீட்டில் இரண்டரைப்பவுண சங்கிலி, ஒருசோடி தோடு, இரண்டு கைத் தொலைபேசிகள் மற்றும் பணம் என்பன திருடப்பட்டுள்ளன.

ஒரே சுற்றுவட்டத்தில் ஒரே தினத்தில் பல இடங்களில் திருட்டுச்சம்பவங்கள் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ற-130)

## போலி வைத்தியர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும்

### சுகாதார அமைச்சு அறிவிப்பு

(கொழும்பு)

மேறகத்தைய வைத்தியர்களாக தம்மை இனஙகாட்டிக்கொண்டு மக்களுக்குச் சிகிச்சைஅளித்துவரும் போலி வைத்தியர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கைகளை எடுப்பதற்கு சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

இதற்கு சகல தரப்பினரதும் ஒத்துழைப்பு அவசியமென சுகாதார அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

விசேடமாக பொது மக்களினதும் அரச வைத்திய அதிகாரிகளினதும் ஒத்துழைப்பு இதற்கு பெறப்பட்டுள்ளது.

பல்வேறு குழுக்கள் இந்நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர். இதில் சிலர் மருந்துக்கலவையாளராகக் கடமையாற்றியவர்கள். மற்றும் சிலர் ஆங்கில மருந்துகளை பயன்படுத்தி சிகிச்சை அளிக்கும் வைத்தியத் துறையைச் சேர்ந்த மருத்துவருக்கான எந்தத் தராதரததையும் கொண்டிராதவர்கள் என்றும் சுகாதார அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இலங்கை முழுவதும் சுமார் 30ஆயிரத்திற்கு மேற்பட்டவர்கள் போலியாக தம்மை மேற்கத்திய வைத்தியர்களாக இனங்காடடிக்கொண்டு செயற்பட்டுவருவதாக அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

இதனால் நோயாளர்கள் பெரிதும் பாதிக்கப்படுவதாகவும் இது தொடர்பாக தமது சங்கம் சுகாதார அமைச்சின் கவனத்திற்குக் கொணடுவந்துள்ளதாகவும் அரசாங்க வைத்திய அதிகாரிகள் சஙகத்தின் செயலாளர் டாக்டர் அநுநதத பாதினிய தெரிவித்துள்ளார். (க-7)

## இனப்பிரச்சினைக்கு யுத்தமூலம் தீர்வுகாண நாமும் தயாரில்லை

### பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் தெரிவிப்பு

இடைநிறுத்தப்பட்டுள்ள சாமதானப் பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கான சகல நடவடிக்கைகளையும் ஐக்கிய மக்கள் சுதநதிர முன்னணி அரசாங்கம் தொடர்ந்தும் மேற்கொள்ளுமென பிரதிப் பாதுகாப்பமைச்சர் ரதண சிறி விக்கிரம நாயக்க தெரிவித்துள்ளார்.

களுத்துறைப்பகுதியில் ஸ்ரீலாங்கா சுதந்திரக் கட்சியின் கூட்டம் ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இந்தக்கருத்தினை வலியுறுத்தியுள்ளார்.

அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

சமாதானப் பேச்சுவார்த்தை மேசைககு வருவதற்கு ஏனையவர்கள் எவ்வளவு தூரத்திற்கு தாயாராகவுளளாா்கள் என்பதுபற்றி எம்மால் கூறமுடியாது.

தற்காலிகத் தீர்வு ஒன்றைப் பெறும் நோக்கில் பேச்சுவார்த்தை நடாத்துவதற்கு நாம் தயாராக வில்லை.

நிரந்தரத் தீர்வொன்றை பெறும் நோக்கிலே நாம் செல்லவேண்டும். அதுவே எமது யோசனையாகும். இந்த யோசனை தொடர்பாக தற்போது பல்வேறு வாதப் பிரதி வாதங்கள் இடம்பெறுகின்றன.

இந்த வாதப் பிரதிவாதங்கள் பற்றி நாம் எதுவும் கவலைப்படவிலலை. குழப்பமடையவும் இல்லை.

யுத்தமொன்று ஏற்படாதிருக்க வேண்டும் என்பதற்காக மிக நிதானமாகவும் பொறுமையாகவும் செயற்படுகின்றோம்.

இதனை சகல தரப்பினரும் விளங்கிக்கொள்ள வேண்டும் தமிழீழ விடுதலைப்புலிகள் மட்டும் தான் சமாதானத்தை விரும்புகின்றார்கள் என எவரும் எண்ணக் கூடாது.

நாங்களும் சமாதானத்தையே விரும்புகின்றோம். எமது நாட்டை எமது மக்களைப் பாதுகாக்க வேண்டுமானால் மீண்டும் போர் எமது நாட்டில் ஏற்படக்கூடாது என்றார்.(க-121)

## முன்னாள் எம்.பிக்களிடம் இருந்து ஆயுதங்கள் களையப்படவுள்ளது?

முனனாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் மாகாணசபை உறுப்பினர்களிடம் இருந்து ஆயுதங்களைக் களையும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவுளளதாக தெரியவருகின்றது. நாட்டில் அதிகிரதுக் காணப்படும் குற்றச்செயல்களை கட்டுப்படுத்தும் நோக்குடனேயே இந்த நடவடிக்கையை அரசாங்கம் உடனடியாக ஆரம்பிக்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

பொதுமக்கள் பாதுகாப்புச்சட்டம், ஒழுங்கமைக்க இது தொடர்பில் சம்பந்தப்பட்வர்களுக்கு கடிதங்களை இவ்வாரம் அனுப்பியுள்ளதாகவும், கடந்த 1988,1989ஆம் ஆண்டுகளில் தற்போதைய ஆட்சியில் இருக்கும் ஜே.வி.பி.மேற்கொண்ட கிளர்ச்சியின் போது பாதுகாப்புக்காக வழங்கப்பட்ட இந்த ஆயுதங்களில் பெரும்பாலானவை இன்னமும் கையளிக்கப்படவில்லையென தெரியவருகின்றது. இதேவேளை கடந்த இரண்டு மாதங்களுக்கு முன் சட்டவிரோதமாக ஆயுதங்களை வைத்திருப்போர் அவற்றை ஒப்படைக்குமாறு அவர்களுக்கு பொது மன்னிப்பு வழங்கப்படும் என்றும் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

(க.08)

## புலிகளையும் - கூட்டமைப்பையும் பிரிக்கும் முயற்சியில் சில தீயசக்திகள்

### கஜேந்திரன் எம்.பி.எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப்புலிகளையும், தமிழ்த்தேசியக் கூட்டமைப்பையும் பிரிக்கும் முயற்சியில் பல்வேறு கட்சிகள் செயற்பட்டு வருகின்றன.

சமாதான காலகட்டத்தில் திரைமறைவில் இவ்வாறான சக்திகள் செயற்பட்டு வருவதனை நாங்கள் அறிந்துள்ளோம்.

இவ்வாறு தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினா் கஜேந்திரன் எச்சரிக்கை விடுததுள்ளார்.

நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் இடம் பெற்ற மகளிர் சங்கம நிகழ்வில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தாா.

எமது தேசிய விடுதலைப்போராட்டத்தை இன்று சர்வதேச நாடுகள் பல கூர்மையாக உற்றுநோக்கி வருகின்றன.

எனவே எமது போராட்டத்திற்கு ஒரு நியாயமான தீர்வைக்காணபது தமிழ் மக்கள் உறுதியாக இருக்கவேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

(க-121)

## ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் கொடுப்பனவு 2மடங்காக அதிகரிப்பு

(கொழும்பு)

ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சிததியடையும் மாணவர்களுக்கான புலமைப் பரிசில் கொடுப்பன்வு இரண்டு மடங்காக அதிகரிக்கப்படவுள்ளது.

2005ஆம் ஆண்டு முதல் இக் கொர்டுப்பனவு இரண்டு மடங்காக அதிகரிக்கப்படும் என கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

இதற்காக 148.4 மில்லியன் ரூபாவை ஒதுக்குவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழஙகியுள்ளதாக்வும் கல்விஅமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

இதன் பிரகாரம் மாதாந்தம் வழங்கப்பட்டுவந்த 250ரூபா புலமைப்பரிசில் கொடுப்பனவு அடுத்த வருடம்முதல் 500ரூபாவாக அதிகரிக்கப்படவுள்ளது. (க-61)

# தமிழ் மரபில் முதுமை - ஒரு குறிப்பு



முதுமை என்பது வாழ்கால (வயது) முதிர்வினைக் குறிப்பது. சகல மனித சமூகங்களிலும் முதுமை பற்றிய சிந்தனையும், சிரத்தையும் இருந்தே வந்துள்ளது. ஒவ்வொரு பண்பாடும் முதியோருககுப் பயனபாடுள்ள வகிபாகத்தை (**role**) வழங்கியிருக்கும்.

தமிழ் மரபில் முதுமை நோக்கப்பட்டு வந்துள்ள முறைமை பற்றிய ஒரு மேலோட்டமான நோக்கினைத் தருவதே இச்சிறு கட்டுரையின் நோக்கமாகும்.

சங்க இலக்கியததில், புறத்திணையிலேயே (அரசு, ஆட்சி, போர் பறறிய குறிப்புகளின் பொழுது) முதுமை பற்றிய பல குறிப்புக்கள் உள்ளன. பொதுவில் 'மூத்தோர்' மரியாதைக்குரியவராகவே குறிப்பிடபபடுகின்றனர். சமூகத்தல், பொதுவில், மூத்தோருக்கே மதிப்பான இடம் இருந்தது என்பது *மூத்தோரிலும் பார்க்க அறிவுடைய ஒருவனுக்கே முதலிடம் இருந்தது* என்னும் கூற்றினை கட்டவிழ்ப்புச் செய்யும் பொழுது புலனாகும்.

அறிவினை தொழில் முறையாக (**Professionally**) வளர்த்தெடுக்க முடியாச் சமூகங்களில் முதுமைக்கு எப்பொழுதும் ஒரு முக்கியஇடம் இருக்கும். அத்தகைய சமூகங்களிலே அனுபவமே முக்கியம் பெறும் முதியவர்கள், இளையோரிலும் பார்க்க அனுபவமுடையோராதலின், அவர் முக்கியப்படுவது இயல்பே. இது எல்லாப் பாரம்பரிய சமூகங்களிலும் (**Traditional societies**) காணபபடும் ஒரு பண்பாகும். உற்பத்தி முறைமைகள் தொடர்ச்சி அறாது பேணப்பட்டுப் போற்றப்படுகின்ற பொழுது, அனுபவஸ்தர்கள் முக்கியம் பெறுவது இயல்பே. கல்வியும் தொழில்நுட்ப வளர்ச்சியும் வேகமாக வளருகின்ற பொழுதுதான் தலைமுறை இடைவெளி (**Generation gap**) தோன்றுவதற்கான அடிப்படைத் தொழிற்பாடுகள் ஏற்படுகின்றன. சங்ககாலச் சமூகம் அத்தகையதொரு பாரம்ப்ரிய சமூகமே. அதனால் அதில் முதுமைக்கு ஒரு முக்கிய இடமிருந்தே வந்தது. (எங்கள் சமூகத்திலும் பாரம்பரிய விடயத்திலும் *வயதுபோனவர்களுக்கு* உள்ள முக்கியத்துவத்தை இந்நியமம் கொண்டு விளங்கிக் கொள்ளலாம்.)

எனினும் அகத்துறை ஈடுபாடு முதியவர்களுக்குத் தடுக்கப்படுகிறது. அத்தகைய ஈடுபாட்டினை பெருந்திணைக் குரியதென்று கூறுவர். பெருந்திணை என்பது பொருந்தாக்காமம். அது ஏற்படும் நிலைகளில் ஒன்றாகக் குறிப்பிடப்படுவது *இளமைதீர்திறம* (தொல்.அகத்.51), அதாவது இளமை தீர்ந்த நிலையிலும்.

ஆயினும் பிற்காலத்தில் வரும் புகழ்ச்சிபபாடல்களில் முதுமை பெரிதும் போறறப்படவில்லையென்றே கூறல் வேண்டும்.

தமிழ்ப் பாரம்பரியத்தில், வயது வளர்ச்சி அடிபபடையில் ஆண்களையும் பெண்களையும் பல்வேறு பருவங்களுக்கு உரியவர்களாக வகுத்துக். கூறுவது வழக்கம். அப் பருவங்களும் அவற்றுக்குத் தரப்படும் வயதுக் கூறும் பின்வருமாறு:

| பெண் | வயது |
|---|---|
| 1.பேதை | 05-08 (சிலர் 05 - 07என்பர்) |
| 2.பெதும்பை | 09-10 ( " 08-11 " ) |
| 3.மங்கை | 11-14 ( " 12-13 " ) |
| 4.மடந்தை | 15-18 ( " 14-19 " ) |
| 5.அரிவை | 19-24 ( " 20-25 " ) |
| 6.தெரிவை | [illegible] ( " 26-31 " ) |
| 7.பேரிளம் பெண் | 30-36( " 32-40 " ) |

| ஆண் | வயது |
|---|---|
| 1.பாலன் | 01-07 |
| 2.மீளி | 08-10 |
| 3.மறவோன் | 11-14 |
| 4.திறலோன் | 15 |
| 5.காளை | 16 |
| 6.விடலை | 17-30 |
| 7.முதுமகன் | 30க்கு மேல் |

(*பன்னிரு பாட்டியல் - கோவித்தரச முதலியார் உரை- கழகம் -1970.பக்71-2*)

பெண்களுக்கு 40க்கு மேலும், ஆண்களுக்கு 30க்கு மேலும் பருவம் குறிக்கப் பெறவில்லை.

இதற்குப் பிரதான காரணம் அககாலத்தில் ஆயுள் எதிர்பார்ப்பு (**Life expectancy**) மிகக் குறைவாகவே இருந்திருக்கும் என்பதாகும். (சுகாதார வசதிகள் வளர்ந்திராத காலம்.) அக்காலத்தில் திருமண வயதே பெண்ணுக்குப் 12உம் ஆணுக்குப் 16உம் ஆகும்.

அரச புகழ்சசியிற கூட, ஒருவன் பெண்களைக் கவர்பவனாய்ச் சித்திரிக்கப்படுவது 48 வயதுக்கு மேல் இல்லை என்பது முக்கியமான ஒரு தரவாகும். உலா இலக்கியம் பற்றிப் பேசும்பொழுது, பன்னிரு பாட்டியல்,

நீடிய நாற்பத்தெட்டின் அளவும்
ஆடவர்கு உலாப்புறம் உதித்து என மொழிய...
என்று கூறும்.

அரச புகழ்ச்சி மரபு இவ்வாறாக இருப்பினும், தமிழின் அறப்போதனை இலக்கியங்களில், படிப்படியாக முதுமை இறப்புக்கு அண்மித்தது என்னும் கருத்து வலியுறுத்தப்படத் தொடங்குகிறது. குறிப்பாக நாலடியாரில் இந்தத் தொனி சற்று வன்மையாகவே கேட்கிறது. இளமை நிலையாமையில வரும பாடல்கள் இதனைச் சுட்டுகின்றன.





சொல் தளர்ந்து கோல் ஊன்றி கோர்த்த நடையினர்
ஆய்
பல்கழன்று, பண்டம் பழிகாறும் இல் -செறிந்து
காமநெறி படரும் கண்ணினர்க்கு இல்லையே
ஏமநெறி படரும் ஆறு. (2:3)

*மூப்பு வரமுன்னே அறவினையைப் பெருக்கவேண்டும் என்னும் நாலடியார் (6:5)*

மத உணர்வும், தெய்வ நம்பிக்கையும் வளர வளர, மரண பயத்தில் இருந்து விடுபடும் எண்ணம் மேலே வளரத் தொடங்குகின்றது. இந்த உணர்வு 14-17ஆம் நூற்றாண்டுகளில் பெரிதும் தலைதூக்கத் தொடங்கிற்று.

இத்தகையதொரு மத - மனச்சூழல நிலவிய காலகட்டத்திலேதான், முதுமையின் கொடூரம் பற்றிய மிக்க கவர்ச்சி வன்மையுடைய பாடல் ஒன்று பட்டினத்தாராலே பாடப்படுகின்றது. அவர் தமது உடற்கூற்று வண்ணத்தில், *முதுமையைச்* சித்திரித்துள்ள முறைமை மனதை வாட்டுவதாகும்.

..................................................

வன்மையும் மாறி இளமையும் மாறி வன்பல்
விழுந்து இரு
கண்கள் இருண்டு வயது முதிர்ந்து நரைதிரை வந்து
வாதவிராத குரோதம் அடைந்து -
செஙகையினில் ஓர் தடியுமேந்தியே
வருவதுபோவது ஒரு முதுகூனும் மந்தியெனும படி
குந்திநடந்து மதியும் அழிந்து செவிதிமிர் வந்து
வாயறியாமல் விடாமல் மொழிந்து
குயில் வரும்நேரம் இருமல்பெறாது தொண்டை
யும் நெஞ்சும்
உலர்ந்து வறண்டு துகிலும் இழந்து சுணையும்
அழிந்து
தோகையர் பாலர்கள் கேறணி கொண்டு
*(கேறணி - கிண்டல் வார்த்தை)*
கலியுகமீதில் இவர்மரியாதை கண்டிடும் என்பவர்
சஞ்சலம் மிஞ்ச கலகலஎன்று மலசலம் வந்து
கால்வழி மேல்வழி சார நடந்து
தெளிவும் இராமல் உரைதடுமாறி சிந்தையும
நெஞ்சமும்
உலைந்து மருண்டு திடமும் உலைந்து மிகவும்
அலைந்து
தேறிநல் ஆதரவு ஏது என நொந்து..................

..................................................

முதுமை தரும் உடற்சிதைவின் கொடூரத்தை மிக வன்மையாகச் சித்திரிக்கும் இப்பாடலை இப்பொழுதும் மரணவீடுகளில் பாடுவதுண்டு.

முதுமை இவ்வாறு சித்திரிக்கப்பட்டுள்ளது உண்மை எனினும், முதியோரைப் பேணல் என்பது புராதன, இடைக்காலங்களில் பெரும் பிரச்சினையாக இருக்கவில்லை என்பதும் புலனாகின்றது. முதியோர் பேணப்பட வேண்டியதன் - பார்த்தெடுக்கப்படவேண்டியதன் - அவசியத்தை எடுத்துக்கூறும் அறப்போதனைப் பாடல எதுவும் இல்லையென்றே கூறவேண்டும்.

இதற்குக் காரணம் குடும்பம் என்ற அலகு மிக வன்மையான ஒன்றாக விளங்கிற்று. தமிழ்ச் சூழலில் தமிழரின் உறவு, ஒழுங்கமைப்பு (**Kinship organization**) முதியோரை நன்கு பேணி வந்துள்ளதென்றெ கருதல்வேண்டும். மகன/ மகளின் பிள்ளைகளுக்கு தகப்பன் (பேரன்) பெயரைச் சூட்டும் முறைமை இந்த இறுக்கத்தைக் காட்டுவதாகும்.

இவ்வாறு பார்க்கும் பொழுதுதான் *கிழவன்*/ *கிழத்தி* (*கிழவி* பயன்படுத்தப் படவில்லை) என்ற சொற்களின் பயன்பாடு சுவாரசியமாகிறது. *கிழவன்* என்பது வயதுமுதிர்ந்த ஆணைக் குறிப்பதற்கு இன்று வழங்கும் சொல்லாகும். ஆனால் இதன் உண்மையான அர்த்தம் *உரிமையுடையவன்* என்பதாகும். தொல்காப்பியப் பொருள் அதிகாரத்தில் கிழவர் (அகத்-21) என்பது நிலத்துக்குரியவரையே குறிக கின்றது. கற்பியலில் வரும் முதற் சூத்திரத்தில்,

கற்பெனப்படுவது கரணமொடு புணரக்
கொளற் குரி மரபின் கிழவன் கிழத்தியை
கொடைக்குரி மரபினோர் கொடுப்பக் கொள்வ
துவே எனும்

இங்கு கிழவன் என்பது தலைவனை, கிழவி தலைவி. உடையவர்கள் என்பது கருத்து. பொருளை / நிலத்தை உடையவர்கள் என்பதே கருத்து. [அடியோர், வினைவலர் (தொழிலாளர்) இதற்குள் வரார்].

இச்சொல் பின்னர் குடும்பத்தில் மூத்தவரைக் குறிக்கின்றது. காரணம் குடும்பச் சொத்து அவர் பெயரிலேயே இருந்தது. பிற்காலத்தில் '*உரியவர்/உரிமையுடையவர்*' என்ற கருத்துக்போய், உரியவரின் பருவத்தைக் குறிப்பதாக மாறிற்று. இந்தச் சொற்பொருள் மாற்றத்தினுள் தொக்கி நிற்கும் சமூக வரலாறு மிக முக்கியமானதாகும்.

கூட்டுக் குடும்பம் இருக்கும் வரையும் முதியவர்களின் இடம் நன்கு பேணப்பட்டு வந்தது. அந்த முறைமை சிதையத் தொடங்க முதுமை பிரச்சினையாகத் தொடங்குகின்றது.

இந்த நிலைமை காலனித்துவ காலத்திலேயே ஏற்படத் தொடங்கிற்று. பெற்றோர் தங்கள் செல்வங்கள் யாவற்றையும் பிள்ளைகளின்பாற் செலவிடுவது அவசியமாகிறது. அன்றேல் அவர்கட்கு (பிள்ளைகட்கு) கல்வி முன்னேற்றம் கிடையாது.

ஆனால் எழுதாக்கிளவியாக பிள்ளைகள் முதிய பெற்றோரைப் பார்ப்பர் என்ற ஒரு நியமம் இருந்து வருகின்றது. ஆனால அதுவும், இப்பொழுது இயலாத ஒன்றாகி விடுகின்றது. இச்சூழலில் முதுமை பெரும் பிரச்சினையாகிறது. இந்தியத் தமிழரிடையே பெற்றோர் மகனுடனும் (மகன்மாருடனும்), யாழ்ப்பாண வழக்கில மகள்மாருடனும் தஙகும் வழக்கம் உண்டு. ஆனால் குடும்ப அமைப்புக்குள்ளேயே சமமற்றவளர்ச்சிகள் ஏற்படுவதால் இதுவும் பிரச்சினையாகி விடுகிறது. யாழ்ப்பாணத்தில் இந்நிலையைப் புறங்காண (குறைந்தபட்சம் இருந்த வீட்டிலேயே தொடர்ந்து வாழ), இருக்கும் வீடு வளவினை, *சீவிய உரித்து* (அதாவது தாங்கள் வாழும்வரை அங்கு தொடர்ந்து வாழ்வதற்குரிய உரிமை) வைத்துச் சீதன உறுதியெழுதும் வழக்கம் உண்டு.

ஆனால் நடைமுறை நிலையில், நமது பாரம்பரியத்தினுள்ளே வசதிமிக்க பிள்ளைகள் முதிய தாய் தகப்பனை கவனிக்காது விடும் பண்பு ஒன்றும் உள்ளது. அத்தகைய நிலைமை காரணமாகவே பின்வரும் பழமொழி வழக்கில் உள்ளது எனலாம்.

ஆத்தை பிச்சை எடுக்க
பிள்ளை, கந்தவனக்கடவையிலை அன்னதானம
குடுக்குதாம்

(இது வடமராட்சியில் வழங்கும் வடிவம். இடததுக்கிடம் கோயிறபெயர் வேறுபடலாம்).

முதியோர் இல்லங்கள் வராத நிலையில் முற்காலத்தில் கோயில்களிலுள்ள மடங்களிலேயே முதியோர்கள் சென்று தங்கி, அங்கு நடைபெறும் அன்னதானச சோற்றை உண்டுவருதல் உண்டு. யாழ்ப்பாணத்தில் இதற்கான மிகச் சிறநத உதாரணம் செல்வச்சந்நிதி கோயிலாகும். தமிழகத்திலும் இந்த முறையுண்டு. பிரபலமான கோயில்களை அண்டி கவனிப்பாரற்ற முதியோர் சீவிப்பதைக் காணலாம்.

நவீன தமிழ் இலக்கியங்களில் முதுமையின் இயலாமைகளும், அது நமது பண்பாட்டில் எதிர்நோக்கும் பிரச்சினைகளும், இடைபரவலாகக் குறிக்கப்படுகின்றனவே தவிர, உன்னிப்பான சித்திரிப்புக்கு உட்படுததப்படடிருப்பதாகக் கூறமுடியாதென்றே கருதுகின்றேன்.

பேராசிரியர்
கா.சிவத்தம்பி

ஷேக்ஸ்பியரின் *லியர் மன்னன்* (**King lear**) போன்ற ஒரு பாத்திரம் தமிழ்ப் புனைகதைகளிலோ, நாவல்களிலோ இல்லையென்று சொல்லலாம். லியர் மன்னன் நாடகம் முதுமையின் அவலத்தை (**The targedy of ageing**) பற்றிய உலகமகா காவியம் என்பர். இன்னொரு நிலை நின்று கூறுவதனாலும், ஹெமிங்வேயின் *கிழவனும் கடலும்* (**The oldman and the sea**) என்ற நாவல் அளவுகூட நம்மிடம் ஒரு சித்திரிபபு இல்லையென்றே கூறவேண்டும்.

மேற்கூறிய அளவுக்கு இல்லையென்றாலும், தமிழ்ச் சூழலில் முதுமை ஏற்படுத்தும் இயலாமைகளையும் அவலங்களையும் தமிழ்த் திரைப்படம் ஒன்று ஓரளவு செவ்வனே செய்துள்ளது எனலாம். வியட்நாம் வீடு படத்தில் வரும் பத்மநாபன் பாத்திரத்தை சிவாஜிகணேசன் சித்திரித்துள்ள முறைமை சிலிர்க்க வைப்பதாகும்.

நம்மிடையே முதியோர் பிரச்சினையுண்டு. அதனை ஒத்துக்கொண்டு அதற்கேற்ற வழிவகைகளைக் காண முயல்வதே பொருத்தமானதாகும்.

இவ்வகையிற் '*கிறிஸ்தவப் .பாதிரிகள்*' நடத்தும் முதியோர் இல்லங்களும், அவற்றைப் பின்பற்றி நடத்தப் பெறும் இந்து இல்லங்களும் வரவேற்கப் படவேண்டியனவாகும்.

*நன்றி முதுமை*

# தமிழ்பேசும் மக்களை பிளவுபடுத்த சிலதீயசக்திகள் முயற்சிக்கின்றன!

## இனியவன் தெரிவிப்பு

(மன்னா

சமாதானத்துக்காக அர்ப்பணிப்புடன் நாங்கள் செயற்பட்டு வ[illegible]கின்ற நிலையில் தமிழ்மொழி பேசும் மக்களை பிளவுபடுத்த சிலசக்திகள் முயற்சிக்கின்றன.

இவ்வாறு மன்னார் மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் எஸ்.இனியவன் தெரிவித்துள்ளார்.

மன்னாரில் அண்மையில் முஸ்லிம் நபர் ஒருவர் கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக வினவியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்துரைக்கையில்,

கடந்த இரண்டரை ஆண்டுகளாக மன்னார் மாவட்டத்தில் பல்வேறு பிரச்சினைகளுக்கு நாம் முகம் கொடுத்து வந்திருக்கின்றோம்.

மன்னார் கரிசல் பகுதியில் அண்மையில் முஸ்லிம் இளை[illegible] ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டதையடுத்து சம்பவத்தன்று 9.00மணிக்கு எமது அரசியல் செயலகப பகுதியில் பொலிஸார் நிறுத்தப்பட்டிருந்தனர்.

தொடர்ந்து இரவு 12.10 மணியளவில் எமது செயலகங்கள் தாகக்கப்பட்டன இது ஏற்கனவே திட்டமிட்ட செயலாகவிருக்கின்றது.

எமது செயலகத் தாக்குதலுக்கு பொலிஸாரின் ஆசியும் ஆதரவும் இருந்துள்ளது.

இது தொடர்பாக 10 பொலிஸாரினை நாம் அடையாளம் கண்டுள்ளோம். இ[illegible]னை பொலிஸ் பொறுப்பதிக[illegible]ரிக்கும் போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவுக்கும் தெரிவித்துள்ளோம்.

இது தொடர்பில் அவர்கள் உரிய முறையில் நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, மன்னார் மாவட்டத்தில் படையினரின் கட்டுப்பாடடுப் பகுதியில் இடம்பெற்ற ஒரு தனிநபரின் கொலையை எம் மீது சுமத்துவதை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

எமக்கும அந்தக் கொலைக்கும எந்தவிதமான தொடர்புமில்லை. தமிழ், முஸ்லிம் என்பதற்கு அப்பால் நாங்கள் இந்த பிரதேசத்தை சேர்ந்தவர்கள் என்ற உணர்வுடனும், தமிழ்மொழி பேசுபவர்கள் என்ற உணர்வுடனும் வாழ்ந்து வருகின்றோம்.

மன்னார் மாவட்டத்தில் வெவ்வேறு சந்தர்ப்பத்தில் மதங்களுக்கும் மக்களுக்குமிடையே பிரச்சினையைத் தூண்டிவிட்டு சிலர் அதில் குளிர்காய முற்பட்டு வருகின்றார்கள்.

இவர்கள் யார் என்று பார்த்தால் தமிழ்த்தேசவிரோத கும்பலைச் சேர்ந்தவர்களாகவிருக்கின்றார்கள். பொலிஸார் மற்றும் இராணுவத்தின் அடிவருடிகளாகவும் இருக்கின்றார்கள்.

அவர்களுக்கு நாங்கள் அரசியல் நடவடிக்கைக்கு வந்த பின்னர் மன்னாரில் இடம்பெற்று வந்த சில சமூகவிரோத செயல்களை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளமை பிரச்சினையாகக காணப்படுகின்றது.

அத்துடன், இது பற்றி நாம் விழிப்புணர்வையும் ஏற்படுத்தியுள்ளோம். இது அவர்களுக்கு முட்டுக்கட்டையாகக் காணப்படுகின்றது.

மன்னார் மாவட்டம் இன்று போதைப் பொருளின் கேந்திர நிலையமாக மாறியுள்ளது. இளம் சமூகத்துக்கு இதனை அடிமைப் படுத்தும் சில நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இதனை விட ஆபாசப்படங்களை விநியோகித்து சமுதாயச் சீரழிவுக்கு இளம் சமுதாயத்தை இட்டுச் செல்கின்றனர்.

இத்தகைய தீயசெயல்களில் ஈடுபட்டவர்களே தற்போது மதம் என்ற ஒன்றினை வைத்து தமிழர்களுக்கும், முஸ்லிம்களுக்கும் சிங்களவர்களுக்கும் இடையில் பிளவை ஏற்படுத்துவதற்கு கங்கணங்கட்டுகின்றார்கள்.

இத்தகைய நிலையில் படையினரின் கட்டுப்பாட்டுப் பகுதியில் இடம்பெற்ற படுகொலைக்கு காரணம் என்னவென்று அறியாமல் திட்டமிட்டமுறையில் உடனடியாக எமது அலுவலகம் மீது சில முஸ்லிம் தொண்டர்கள் தாக்கியமையானது மிகவும் மோசமான காட்டுமிராண்டித்தனத்தை வெளிப்படுத்தியுள்ளது.

இந்தக் கொலைக்கான உண்மையான நிலை என்று விசாரணை செய்து நடவடிக்கை எடுக்கவேண்டும். ஆதாரங்கள் எதுவுமின்றி அபாண்டமான குற்றச்சாட்டினை சுமத்துவது கவலைக்குரியதொனறாகும்.

எமது காரியாலயம் தடுக்கப்பட்டமையையடுத்து தமிழர்களும் வன்முறையில் இறங்கியிருந்தால் நிலைவேறு. ஆனால் நாங்கள் மிகவும் அமைதிகாத்தோம். சமாதானத்துக்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகின்றோம். உண்மையான நிலை கண்டறியப்பட வேண்டும் என்பதற்காக பொறுமையாக இருக்கின்[illegible]ோம் என அவர் மேலும் தெரிவித்[illegible] (க-1[illegible]1)

## பாடசாலைகளுக்கு குடிநீர்த் தாங்கிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் உள்ள 5 வலயங்களிலும் உள்ள மிகவும் பின்தங்கிய சுமார் 75 பாடசாலைகளுக்கு யுனிசெவ் நிறுவனத்தின் நிதியுதவியுடன் மிக விரைவில் குடிநீர்த்தாங்கிகள் அமைக்கப்படவுள்ளன.

இதற்கான திட்டங்களும் நிதியுதவிகளும் வழங்கப்பட்டிருப்பதாகவும் இதற்கான கேள்விப்பத்திரம் விரைவில் கோரப்படவுள்ளதாகவும் யாழ்.கல்வி வலய உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மேற்படி பாடசாலைகளில் சுமார் 10.8 மில்லியன் ரூபா நிதி செலவில் குடிநீர் தாங்கிகள அமைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ற-5)

## ஐ.தே.கவுக்கு எதிரான அரசின் அரசியல் பழிவாங்கல் தொடர்கிறது

(கொழும்பு)

ஐக்கிய தேசிய முன்னணி ஆட்சியில் இருந்த சமயம், அரச சேவையில் சேர்த்துக் கொள்ளப்பட்ட ஊழியர்களையும் ஐக்கிய தேசியக் கட்சியின் தொழிற்சங்க ஊழியர்களையும் சேவையில் இருந்து நீக்க அரசு முயற்சிப்பதாக ஐக்கிய தேசியக கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் காமினி லொக்குகே தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் நடைபெறற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்துகொண்டு பேசுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து அங்கு பேசுகையில்,

இதுவரை ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஊழியர்கள் தற்போதைய அரசினால் இவ்வாறு சேவையில் இருந்து நீக்கப்பட்டுள்ளார்கள்.

வாழகைச் செலவு அதிகரிக்கும் போது நாம் எதிர்ப்பினைத் தெரிவித்தோம். இந்த எதிர்ப்புக்களுக்கு முகம்கொடுத்து பிரச்சினைகளைத் தீர்க்க முடியாத அரசாங்கம் ஐக்கிய தேசியக்கட்சியின் தொழிற்சங்க உறுப்பினர்களையும், கடந்த அரசாங்கத்தினால் இணைத்துக் கொள்ளப்பட்ட ஊழியர்களையும் நீக்கும் நடவடிக்கையினை தற்போது மேற்கொண்டு வருகின்றது.

பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்பு வழங்கும் நடவடிக்கைகளை மேற்கொள்வதாகக் கூறிக் கொண்டாலும், மறுபக்கத்தில அதற்கு அதிகமானோர் பதவியில் இருந்து நீக்கப்படுகின்றனர் என அவர் மேலும் தெரிவித்தார்.(க-121)

## பட்டதாரி ஆசிரியர் சங்கம் தமிழக அரசுக்கு எச்சரிக்கை

வரும் தீபாவளிக்குள் 9சதவீதமாக விலைப்படி வழங்கப்படவேண்டுமென்றும் பறிக்கப்பட்ட உரிமைகளையும் சலுகைகளையும் திரும்பத்தரவேண்டும் என்றும் பட்டதாரி ஆசிரியர்கள் தமிழக அரசை வலியுறுத்தியுள்ளனர்.

தமிழ்நாடு உயர்நிலை மேல் நிலைப்பள்ளிப் பட்டதாரி ஆசி[illegible]ர் கழகத்தின் முதல் மாநாடு நேற்று முன்தினம் நெல்லையில் இடம்பெற்றது.

மாநாட்டின் முடிவில் கழகத் தலைவர் மாதவன் மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் பற்றிச் செய்தி ஆசிரியர்களிடம் விளக்கினார்.

பறிககப்பட்ட சலுகைகளையும், உரிமைகளையும் திரும்ப வழங்கவேண்டுமென்றும், 9 சதவீத அகவிலைப்படி அளிக்க வேண்டுமென்றும் தமிழக அரசை வலியுறுத்தியுள்ளதாக அவர் கூறினார். தீபாவளிக்கு முன் இவற்றை அளிக்காவிட்டால் போராட்டத்தில் ஈடுபடநேரிடும் என்றும் அவர் தெரிவித்தார்.

பள்ளி தொடங்கும் நேரத்தை முன்பிருந்தபடி காலை 10.00 மணிக்குத் தொடங்க உத்தர விடவேண்டுமென்றும் அவர் கேட்டுக்கொண்டார். பள்ளி வேலை நாட்களை 200 இல் இருந்து 230 ஆக அதிகரித்ததற்கு எதிர்ப்புத் தெரிவத்த மாதவன் இதை பழையபடி 200 நாட்களாக்கவேண்டுமென்றும் வலியுறுத்தினார். (து)



ஒரிசா மாநில அரசு புவனேசுவாரம் புறநகர் பகுதியில் உள்ள கிராமத்தில் சாராய விற்பனையை அறிமுகப்படுத்தியதற்கு எதிர்ப்புத் தெரிவித்து மகளிர் அமைப்பினர் வாயில் துணி கட்டிப் போராட்டம் நடத்தினர்.



காந்தி ஜெயந்தியையொட்டி மதுரை ஜெயின் சமூகக் குழுவினர் சார்பில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற பாரம்பரிய குஜராத்தி கோலாட்ட நடனத்தில் பங்கேற்ற எட்டு மாதக் குழந்தை ஆஷ்மி.

## பாக். பத்திரிகையாளர் குழு இந்தியா வருகை

பாகிஸ்தான் பத்திரிகையாளர் குழுவொன்று காஸ்மீர் மாநிலத்தைப் பார்வையிடுவதற்காக நேற்று முன்தினம் இந்தியா வந்துள்ளது.

நல்லெண்ணப் பயணமாக வந்த இந்தக் குழுவில் 16 பேர் இடம்பெற்றுள்ளனர். அவர்களுக்கு இந்தியா - பாகிஸ்தான் நுழைவாயிலிலுள்ள வாகா எல்லையில் தெற்காசிய சுதந்திரப் பத்திரிகையாளர் சங்கம், ஜம்மு - காஷ்மீர் மற்றும் பஞ்சாப் பத்திரிகையாளர் சங்கங்கள் சார்பில் உற்சாகமான வரவேற்பு அளிக்கப்பட்டது. காஷ்மீரில் நிலவும் சூழ்நிலையைப் பார்வையிட்டு எழுதுவதற்காகவே தாங்கள் வந்திருப்பதாக பாகிஸ்தான் பத்திரிகையாளர் குழுத் தலைவர் தெரிவித்தார்.

பாகிஸ்தானின் பிரபல பத்திரிகைகளான த நியூஸ், டான் மற்றும் அந்நாட்டுத் தொலைக்காட்சிகளின் பிரதிநிதிகள் இந்தியா வந்துள்ள குழுவில் இடம்பெற்றுள்ளனர்.

இந்தியா - பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சர்கள் டில்லியில் கடந்த மாதம் நடத்திய பேச்சுவார்த்தைகளின் பிறகு பாகிஸ்தான் பத்திரிகை செய்தியாளர்கள் இந்தியாவர விசா வழங்க மத்திய அரசு முடிவு செய்தது. (து)

## இந்தியச் செய்திகள்

## எட்டுத் தீவிரவாதிகள் ஆயுதங்களுடன் கைது

தடைசெய்யப்பட்ட தமிழர் விடுதலைப் படையைச் சேர்ந்த தீவிரவாதிகள் 8பேர் கடலூர் மற்றும் பெரம்பலூர் மாவட்டங்களில் வெடிகுண்டு வீச்சரிவாள போன்ற பயங்கர ஆயுதங்களுடன் கைது செய்யப்பட்டுள்ளனர்.

முதல கட்டமாக கடலூரில் பதுங்கியிருநத அவ்வியக்கத்தின் மாநில பாதுகாப்புத் தலைவர் சாருகான் மற்றும் ஜெகன் ஆகிய இருவரும் நெய்வேலி மந்தராக்கும்பம் மற்றும வடலூர்ப் பகுதியில் 5 பேரும்கைது செய்யப்பட்டனர். மேலும் பெரும்பலூர் மாவட்டம் லப்பைக்குடிக்காட்டில் அன்சி என்ற தீவிரவாதி ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். (து)

## வெங்கைய நாயுடுவுக்குக் கறுப்புக்கொடி காட்ட முயன்ற 60 காங்கிரஸார் கைது

பா.ஜ.க.தலைவர் வெங்கைய நாயுடுவுக்குக் கறுப்புக்கொடி காட்ட முயன்ற 60 பேர் நேற்று முன்தினம் நாமக்கல்லில் கைது செயயப்பட்டனர். நேற்றுமுன்தினம் அங்கு நடத்த பா.ஜ.க. கூட்டத்தில் காங்கிரஸுக்கு எதிராக அவர் கூறிய கருத்துக்களைக் கண்டித்தே இப்போராட்டம் நடத்தப்பட்டது.

வெங்கைய நாயுடுவின் பேச்சைக் கண்டித்து நாமக்கல் காங்கிரஸை நாமக்கள் அண்ணா சிலை அருகே வெங்கையநாயுடுவுக்குக் கறுப்புக்கொடி காட்ட முயன்றனர்.

கறுப்புக் கொடிப்போராட்டத்தில் ஈடுபட்ட காரங்கிரஸார் வெங்கைய நாயுடு மற்றும் பா.ஜ.க தலைவர்களுக்கு. எதிராகக் கோஷங்களையும் எழுப்பினர். இதையடுத்து சட்டமனற உறுப்பினர் ஜெய[illegible]கு மார் உள்ளிட்ட 60ற்கும் மேற்பட்ட காங்கிரஸ தொண்டர்கள் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்[illegible] பின்னர் விடுதலை செய்யப்பட்[illegible]ர்.(து)

## இன்று ஒரு தகவல்

### நம் வாழ்க்கை நம் கையில்

பஞ்சபாண்டவர்களில் மூத்தவர் தருமர். அவர் ஒருநாள் வீட்டுத் திண்ணையில் அமர்ந்திருந்தார். அப்போது தெருவில் பிச்சைக்காரன் வந்து இவர் முன் நின்று பிச்சை தருமாறு கேட்டான். அந்த சமயத்தில் தருமர் ஏதோ வேலையாக இருந்திருக்கிறார். அதனால் " நாளைக்கு வா" என்று சொல்லி அவனை அனுப்பி வைத்துவிட்டார். அவனும் சரி என்று கூறிப் போய் விட்டான்.

பீமன் இதைப் பார்த்துக் கொண்டிருந்தார். உடனே என்ன செய்தான் தெரியுமா? ஒரு முரசை எடுத்துக் கொண்டு கிராமத்தை நோக்கி ஓடினான். முரசை அடித்துக் கொண்டு ஏதோ சொல்ல ஆரம்பித்து விட்டான். தருமருக்கும் இது தெரிந்தது. " என்ன ஆனது உனக்கு?" என்று கேட்டார். அதற்குப் பீமன் சொன னான் " நான் கிராம மக்களுக்கு என் அண்ணன காலத்தை வென்று விட்டார் என்று சொல்லப் போகிறேன்" என்றான்.

"ஏன் அப்படிச் சொல்லப் போகிறாய்?" என்று கேட்டார். " நீங்கள் பிச்சைக்காரனை நாளைக்கு வரச் சொன்னீர்களே நீங்கள் நிச்சயமாக நாளைக்கு இருப்பீர்களா? இந்த பிச்சைக்காரனும் நாளைக்கு உயிரோடு இருப்பானா? நாளைக்கு நீங்கள் இருந்தாலும் பிச்சை போடும் மனோபாவம் உங்களுக்கு இருக்குமா? பிச்சை நிச்சயம் போடுவீர்களா? நாளை வரை அவன் பிச்சைக் காரனாகவே இருப்பான் என்பது நிச்சயமா? நாளைக்கு உங்கள் சந்திப்பு நிச்சயம் நடக்குமா? நீங்கள் காலத்தை வென்றுவிட்டீர்கள் அதனால் தான் அவ்வளவு நிச்சயமாக நாளைக்கு வரச் சொல்லியிருக்கிறீர்கள்.

இது எவ்வளவு பெரிய விஷயம்? நேரமாகி விட்டது. நான் ஊருக்குள் போய் உடனே எல்லோருக்கும் இதைக் கூறிவிட வேண்டும் தாமதிக்க முடியாது. ஏனென்றால் இந்த நேரம் போய் விட்டால் அடுத்த நேரம் எனக்குக் கிடைக்கும் என்பது நிச்சயமில்லை" என்றான் பீமன்.

உடனே தருமர் சொன்னார்." தம்பி கொஞ்சம் பொறு. நான் தவறு செய்துவிட்டேன் பரிபூரண சுதந்திரம் பெற்ற மனிதன் தான் அப்படிப் பேச முடியும். வாக்குறுதி தர முடியும். அந்தப் பிச்சைக்காரனை இப்போதே கூப்பிடு. ஏதாவது உடனே கொடுத்து அனுப்பி வைத்து விடுகிறேன். நாளைக்கு என்ன நடக்கும் என்பது யாருக்குத் தெரியும்?" என்றார்.

இதிலிருந்து நாம் என்ன தெரிந்துத கொள்ள வேண்டுமென்றால் நிகழ்காலம் தான் நமது கையில் இருக்கிறது. அதைச் சரியாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டியது நமது பொறுப்பு.

ஒரு ஊரில் ஒரு ஜோதிடர் இருந்தார். அவர் எதிர்காலத்தைப் பற்றியே அதிகமாகச் சொல்லிக் கொண்டிருந்தார். அவரது ஜோசியத்தைப் பொய்யாக்கி விட வேண்டுமென்று இரண்டு இளைஞர்கள் தீர்மானித்தார்கள். அதற்காக திட்டமிட்டனர். அது குளிர்காலம். ஒரு இளைஞன் பெரிய கோட்டை சட்டைக்கு மேல் போட்டுக் கொண்டான். அந்த மேல் கோட்டுக்குள் ஒரு புறாவை மறைத்து வைத்துக் கொண்டான்.இரண்டு பேரும் அந்த ஜோஷியர் வீட்டுக்குப் போனார்கள். " இதோ பாருங்கள் இந்தக் கோட்டுக்குள் ஒரு புறாவை மறைத்து வைத்திருக்கிறோம். அந்தப் புறா இப்போது உயிரோடு இருக்கிறதா இறந்துவிட்டதா என்பதை நீங்கள் சொல்ல வேண்டும். சரியாகச் சொல்லி விட்டால் உங்கள் ஜோஷியத்தை நம்புகிறோம்" என்றனர்.

இவர்களின் மனதிற்குள் என்ன திட்டமென்றால் புறா உயிருடன் இருப்பதாகச் சொன்னால் அப்படியே கையால் அழுத்திக்கொன்று விடுவது. செத்து விட்டதென்று சொன்னால் அப்படியே உயிருடன் எடுத்துக் காட்டிவிடுவது. இதுதான் அவர்களது திட்டம். அவர் என்ன பதில் சொன்னாலும் அவர் சொல்வது பொய் என்று நிரூபித்து விடலாம் என்பது அவர்களது நம்பிக்கை.

இந்த ஜோஷியார் எந்த வகையிலும் தப்பிக்க முடியாது என்று நம்பினார்கள். ஆனால் அந்த ஜோஷியர் சொன்ன பதில் அந்த இளைஞர்களைத் திகைக்க வைத்துவிட்டது. அவர் என்ன சொன்னார் தெரியுமா? "உங்கள் கோட்டில் உள்ள புறா உயிருடன் இருக்கிறதா இறந்து விட்டதா என்று கேட்கிறீர்கள். அது உங்கள் கையில் இருக்கிறது. அது சாவும் இல்லை. உயிரோடும் இல்லை. அதன் வாழ்வும் சாவும் உங்கள் கையில உள்ளது " என்றார்.

இந்த இளைஞர்கள் தோல்வியை ஒப்புக் கொண்டு தலையைக் குனிந்து கொண்டுபோய் விட்டனர். அதனால நமது வாழ்க்கை என்பது நமது கையில் தான் உள்ளது. நாம் நன்றாக இருப்பதற்கும் அப்படி இல்லாமல் போவதற்கும் காரணம் நாம் தான்இதைப் புரிந்து கொண்டு ஒவ்வொரு வினாடியும் அனுபவித்து வாழ வேண்டும்.

ஒரு ஆஸ்பத்திரியில் படுக்கையில் இருந்த நோயாளி சொன்னார்."டாக்டர் எனது வாழ்வும் சாவும் உங்கள் கையில் தான் உள்ளது. ஏனென்றால் இப்போது எனக்கு சத்திர சிகிச்சை செய்யப் போவது நீங்கள்" என்றார். "பயப்படாதீர்கள்" என்றார் அந்த டாக்டர். "அதற்கில்லை டாக்டர்.இதுவரையில் நான் ஆஸ்பத்திரிப் பக்கமே வைத்தியத்திற்கு வந்ததில்லை. இதுதான் எனது முதல் அனுபவம். அதுதான் பயமாக இருக்கிறது" என்றார் அவர். அதற்கு அந்த டாக்டர் "எனக்கும் தான் இது முதல சத்திர சிகிச்சை. அதற்காக நான் பயப்படவில்லையே" என்றார்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# பெண்கள் தமது மனஇருளை அகற்றி வல்லமைகளை வெளிப்படுத்த வேண்டும்

## தமிழீழ மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் உரை

(யாழ்ப்பாணம்)

**தமிழ்ச் சமூகம் காலாகாலமாகக்கொண்டுள்ள பல்வேறுபட்ட பிற்போக்கு கருத்து உருவாக்கங்களின் காரணமாக பெண்கள் தமது பலத்தை தாமே உணராமல் மிகவும் பின் தங்கிய நிலையில் இருந்து வருகின்றனர்.**

**இந்நிலை மாறி பெண்கள் தமது மனதிலுள்ள இருளை அகற்றி தமது ஆற்றல்களை புதிய உத்வேகத்துடன் வெளிப்படுத்தவேண்டும்.**

நேற்று முன்தினம் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்ற மகளிர் சங்கம நிகழ்வில் தமிழீழ மகளிர் அரசியல் துறைப்பொறுப்பாளர் தமிழினி உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

ஒரு சமூகத்தில் பெண் என்று குறிப்பிடும்போது ஒரு விளக்கம் வழங்கப்படுகிறது அதாவது , பெண் என்றால் இப்படித்தான் இருக்கவேண்டும் என்ற கருத்து அந்த சமூகத்தில் வாழுகின்ற அனைவரது மனத்திலும் ஆழப்பதிந்துபோய் இருக்கின்றது. இந்த கருத்தை வலியுறுத்தித்தான் எங்களுடைய சமுதாய வாழ்க்கை அதனுடைய வரலாறு கால கட்டங்கள் ஒவ்வொன்றிலுமே பெண் சித்தரிக்கப்பட்டு வந்திருக்கின்றாள்.

ஆரம்ப காலத்தில் பெண்கள் தாய்மைச் சமூகமாக இருந்த போது அந்த சமூகத்திற்கு பெண் தலைமை தாங்கியிருக்கிறாள்.ஆரம்பகாலத்தில் காடுகளிலே மிருகங்களோடு மிருகமாக மக்கள் வாழ்ந்தபோது வேட்டைக்கு தலைமை தாங்கினாள்.

அங்கு கிடைக்கும் உணவுகளை பகிர்ந்தளித்தாள். அங்கு அந்த தாய் ஒரு கடவுளாக மதிக்கப்பட்டாள்.ஆனால், சமூக மாற்றத்தில் தற்சமயம் பெண் பல்வேறுபட்ட பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

தாய்மைப் பேறு என்ற அந்த விடயத்தைக் கருதி முன்னா பெண்கள பாதுகாக்கப்பட்டனர் பெண் பாதுகாக்கப்பட்டால் தான் ஒரு மனித சமூகம் உருவாவது தடை செய்யப்படாது என்ற நோக்கத்துடன் அவள் பாதுகாக்கப்பட்டாள்.

ஆரம்ப காலத்திலே மனிதனுக்கு நெருப்பைப் பெறுவது கடினமாக இருந்தது. எங்கிருந்தோ கொண்டுவந்த அந்த நெருப்பை அவர்கள் வேட்டையாடச்செல்லும் போதெல்லாம் பாதுகாக்க வேண்டிய தேவை அவர்களுக்கு இருந்தது.



ஆகவே அந்த நெருப்பை பாதுகாப்பதற்கு தாய்மையடைந்த அந்தப் பெண்ணை தங்களுடைய இருப்பிடங்களிலே இருத்திவிட்டார்கள்.

அன்று நெருப்போடு இருந்த பெண்கள், இன்றும் அதிலிருந்து எழும்ப வில்லை. இது அன்று ஒரு நல்ல நோக்கத்திற்காக அமைந்திருக்கலாம். ஆனால், இன்று அதுவே பெண்களுடைய உலகமாக மாறி பெண்களை ஒரு வட்டத்திற்குள் ஒடுக்கி வைத்திருக்கின்றது.

மேலும் ஒவ்வொரு கால கட்டத்திலும் எழுந்த இலக்கியங்கள், இதிகாசங்கள் மற்றும் புராணங்கள் எல்லாமே பெண்களுடைய இயல்புகளை,பண்புகளைச் சித்தரிக்கையில் அவர்களது புற அழகை மாத்திரம் வர்ணிப்பதே பெரும்பாலும் கருத்தில் கொள்ளப்பட்டுள்ளது.

பெண் பிள்ளைகள் பிறக்கும் போதே பெண்கள் இப்படித்தான் இருக்க வேண்டும் என தீர்மானிக்கப்படுகிறது. சாதாரணமாகக் கிராமங்களில் பெண்பிள்ளைகள் பிறந்தால் ஒரு இரக்கநிலையாகவே கருதப்படுகிறது.

இதனால் பிறக்கும் போதே இரக்க நிலைக்குரிய ஒரு பிறவியாகவே பெண்கள் கருதப்படுகிறார்கள். இந்நிலை தான் இன்று சமூகத்தில் இருக்கினற யதார்த்தம்.

எமது சமூகத்தில் தமது ஆத்மபலம்,அறிவியல் ரீதியான வளர்ச்சி என்பவற்றுடன் தங்களால் முடியும் என்பதும் தெரியாத ஓர் நிலையிலேயே பெண்கள் இருந்து வருகின்றனர். ஏனென்றால் பெண்கள் இப்படித்தான் இருக்கவேண்டும் எனப் பழக்கபபட்டவர்களாக இவர்கள் வளர்த்தெடுக்கப்படவில்லை.

இப்படிப்பட்ட ஒரு சமூகத்தில் இருந்துதான் 2ஆம் லெப். மாலதி வெளிவந்தாள். அப்படி வந்ததால் தான் இன்று போராட்டத்தில் பெண்கள் தரையில் மட்டுமன்றி கடலிலும் சாதனை படைத்து வருகின்றனர்.

இன்று பெண்கள் மத்தியில் இருந்த பழைமை விம்பம் உடைக்கப்பட்டு பெண்கள் இன்று வித்தியாசமான வகையில் முன்னேறி வருகின்றனர்.

எனவே, பெண்கள் தமது மன இருளை அகற்றித் தமிழ்ச் சமூகக் கட்டமைப்பிற்கேற்ப தமது வல்லமையை வளர்த்தெடுக்க வேண்டும் எனக் குறிப்பிட்டார். (ந-19)

## இராசி பலன்

**05.10.2004**

**(புரட்டாதி 19, செவ்வாய்க்கிழமை)**

**சப்தமி பின்னிரவு 2.08 மணிவரை**

**மிருகசீரிடம் பி.ப. 2.18 மணிவரை**

**இராகுகாலம் 3.02- 4.32 மணிவரை**

**சுபநேரம் 10.32 - 12.02 மணிவரை**

- **மேடம்** – வாக்கு மேன்மை, காரிய அனுகூலம், நண்பர்கள் சந்திப்பு, கூட்டு முயற்சி.
- **இடபம்** – கடின வார்த்தை, மாதர் நட்பு, பண விரயம், வேலைச் சுமை.
- **மிதுனம்** – தேக நலன், சிந்தனை மிகுதி, நண்பர்கள் சந்திப்பு, காரிய அனுகூலம்.
- **கடகம்** – பிரயாண அலைச்சல், வேலைப் பளு அதிகம், பணவிரயம், நண்பர்கள் விரோதம்.
- **சிங்கம்** – இஷ்ட சித்தி, குடும்ப மகிழ்ச்சி, தெய்வ அனுகூலம், தொழில் வருமானம்.
- **கன்னி** – நல்ல செய்தி, நிலை மாற்றம், உற்சாகம், சுமாரான வருமானம்.
- **துலாம்** – பித்தரோகம், பிதா சிந்தை, முயற்சி தாமதம், மனப்பயம்.
- **விருச்சிகம்** – வீண் பிரச்சினை, காரிய தடங்கல், பணக் குறைவு, கௌரவக் குறைவு.
- **தனுசு** – போசன நன்மை, நல்ல் வரவேற்பு, தனவருவாய், ஆரோக்கியம்.
- **மகரம்** – எடுத்த கருமங்கள் கைகூடும், கௌரவமான நிலை, விருந்துபசாரம், உடல் நலம்.
- **கும்பம்** – தாழ்ந்த சுபாவம், முயற்சி தாமதம், பணவிரயம், உடல் நலக் குறைவு.
- **மீனம்** – பதற்ற நிலை வேலையில் ஆர்வம், காரிய தாமதம், நண்பர்கள் சந்திப்பு.

பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது

– வளவன்

## இரண்டு கிலோ ஹெரோயின் பொதி தலைமன்னாரில் கண்டுபிடிப்பு

(மன்னார்)

தலைமன்னாரில் 60 இலட்சம் ரூபா பெறுமதியான இரண்டு கிலோ நிறையுடைய ஹெரோயின் போதைப் பொருட்கள் பொலிஸாரால் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

பொதி செய்யப்பட்ட நிலையில் இருந்த இந்த ஹெரோயின் பொதி கடந்த சனிக்கிழமை மாலை தலைமன்னார் வீதியில் ஓலைத்தொடுவாய்க்கும், கரிசல் சந்திக்கும் இடையிலான வீதி ஓரத்தில் மன்னார் பொலிஸாரால் கண்டுபிடிக்கப்பட்டதாக பொலிஸ் தலைமையக போதைப் பொருள் ஒழிப்புப்பிரிவின் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

இந்தத் ஹெரோயின் பொதிக்கும் கடந்த வியாழனன்று கரிசல் பகுதியில் இடம்பெற்றகொலைக்கும் தொடர்பிருக்கலாம என பொலிஸார் சந்தேகிப்பதாக பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

மன்னார்ப் பகுதியில் போதைப்பொருட் கடத்தல் முன்னர் ஒரு போதும் இல்லாதவாறு தற்போது அதிகரித்து வருவதாகவும் கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னரும் 6 கிலோ நிறையுடைய மூன்றரைக்கோடி ரூபா பெறுமதியான ஹெரோயின் போதைப் பொருள் கண்டெடுக்கப்பட்டதாகவும் பொலிஸ் அதிகாரி மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இப்போதைப்பொருள் சம்பவம் குறித்து மன்னார் பொலிஸார் கருத்துத்தெரிவிக்கையில்,

இந்த ஹெரோயின் போதைப்பொருள் பொதிக்கும், கடந்த வியாழனன்று கரிசல் பகுதியில் இடம்பெற்ற கொலைக்கும் ஏதோ ஒரு வகையில் தொடர்பிருப்பதாக நாங்கள் சந்தேகிக்கின்றோம்.

கொலை நடந்த இடத்திற்கும், போதைப்பொருள் கண்டெடுக்கப்பட்ட இடத்திற்கும் இடையில் வெகுதூரம் கிடையாது.

இதேவேளை, கரிசல் பகுதியில் இடம்பெற்ற முஸ்லிம் குடும்பஸ்தரைச் சுட்டுக்கொன்றவர்கள் தொடர்பாக பொலிஸார் விசாரணைகள் மேற்கொண்டுவருகின்றனர். (க-121)

தோன்றின் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று - குறள்

வலம்புரி

# 'சாகித்திய ரத்ன' விருதுபெறும் பேராசிரியர் சிவத்தம்பி

முதுபெரும் பே ரியர் கார்த்திகேசு சிவத்தம்பி அவர்களை அறியாத தமிழுலகு இருக்க முடியாது.

ஈழத் தமிழர்களின் அறிவுக் களஞ்சியமாக விளங்கும் அவர் தமிழ் மொழிக்காக ஆற்றிய பணி அளப்பரியது. அத்தகைய சிறப்புமிகு பணிக்காக "சாகித்திய ரத்ன" விருது அவருக்கு வழங்கப்படுகிறது.

தமிழ்மொழியின் வளர்ச்சிக்கு அரும்பணி யாற்றிய பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி அவர்களுக்கு சாகித்திய ரத்ன விருது வழங்கப்படுவதனூடே ஓர் "விருது" "விருது" பெறுவதாகவே அறிவுசால் பெரியோர் பொருள் கொள்வர்.

வடமராட்சி கரவெட்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட பேராசிரியர் சிவத்தம்பி அவர்கள் பேராதனைப் பல்கலைக்கழகத்திலும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும் தமிழ் மொழித் துறையின் தலைவராக இருந்து மொழியியலுக்காகத் தன்னை அர்ப்பணித்துச் செயலாற்றியவர்.

தமிழ்மொழித் திரட்சிக்கும், சொல்லாட்சிக்கும் அவரின் பணி பெரும் உதவி புரிந்தது. எந்த ஒரு மொழி தன்னுள் நிறைந்த சொல் வளத்தைப் பெற்றுள்ளதோ அந்த மொழியே உலக மொழிகளுள் உயர்வு பெறும் என்பது மொழியியலாளர்களின் கருத்து.

அவ்வகையில், தமிழ்மொழியில் சொல் வளத்தைப் பெருக்குவதிலும், புதிய வரவுகளுக்கான சொற்களஞ்சியத்தை உருவாக்குவதிலும் பேராசிரியர் சிவத்தம்பியின் செயலாக்கம் அற்புதமானது.

தமிழ் மொழியின் இனிமை பற்றி பேசுகின்ற நாம், பல்வேறு இலக்கியச் சுவைகளை ரசித்துக் கொள்கின்றோம்.

தென்னகத்து கவிஞர்கள், அறிஞர்களின் அற்புதமான தமிழியல் படைப்புக்களை - ஆக்கங்களை நுகர்ந்து தேன்சுவை கொள்கின்றோம். அதேவேளை அவை தென்னகத்தவர்களின் படைப்பு என்ற வகையில் ஈழத் தமிழர்களின் ஆக்கப்பாடுகள் என்ன? என்ற கேள்வி எழுவதும் நியாயமானதே.

அத்தகைய நியாயமான கேள்வி எழுகின்ற ஒருவரை, பேராசிரியர் சிவத்தம்பி அவர்களின் தமிழ்ப்பணி ஆற்றுப்படுத்துவதாக உள்ளது.

ஆம், தமிழ் மொழியில் பல்வேறு கல்விச் சுவைகளை, இலக்கிய இலக்கணச் சுவைகளை நுகர்ந்த தமிழினத்திற்கு ஈழத்து தமிழ் அறிஞர், பேராசிரியர் சிவத்தம்பி அவர்களின் "சொல்லாக்கம்" தமிழ் கூறும் நல்லுலகை எம்பால் திசை திருப்பியுள்ளது.

திசைச் சொற்களின் ஊடுருவல் தமிழ்மொழியில் தொடர் கதையாகுமா? ஆங்கிலமொழியின் கலப்பு பெரிதாகிவிடுமா? என்ற ஏக்கத்தின் மத்தியில் பேராசிரியர் சிவத்தம்பி அவர்கள் ஆக்கிய "புதிய தமிழ்ச் சொற்கள்" தமிழியலில் ஓர் மறுமலர்ச்சி அத்தியாயத்தை தோற்றுவித்தது.

இப்படியும் தமிழ்ச் சொற்களை உருவாக்கிக் கொள்ளமுடியும் - பிறமொழியில் தங்கியிருக்க வேண்டிய தேவை இல்லை என்ற உண்மையை தமிழர்களுக்கு எடுத்துக் காட்டியவர் பேராசிரியர் அவர்களே.

அவரின் தமிழ்மொழி ஆய்வுகள், எழுத்தாக்கங்கள், உரைகள் இவை கடந்த தகைசார்ந்த மாணவர்களின் உருவாக்கங்கள் இவையெல்லாமே அவரை ஈழத்தமிழர்களின் பெரும் சொத்தாக மொழிக் களஞ்சியமாக ஆக்கியது. அவருக்கு இன்று கிடைக்கின்ற விருது தமிழுக்குக் கிடைக்கின்ற விருதாகும்.

# உசன்,எழுதுமட்டுவாள் பகுதி விவசாயச் செய்கைக்கு பூரண ஒத்துழைப்பு வழங்குவதாக படைத்தரப்பு உறுதி

## இலவச விவசாய உள்ளீடுகளை வழங்குவத. கவும் அரச அதிபர் தெரிவிப்பு

(சாவகச்சேரி)

விவசாயிகளை பாதிக்கும் மேலதிக மழை நீர் வழிந்து ஓடக்கூடியதாக உசன் தொடக்ச நா கோவில் பகுதி வரையான மதகு மற்றும் வாய்க்கால்களைப் புனரமைப்புச் செய்வது உட்பட இப்பகுதியில் உள்ள தடைகளை அகற்றுவதற்கும் பூரண ஒத்துழைப்பு வழங்குவதாக இராணுவத்தின் 55ஆவது படையணி உசன் விவசாயிகளுக்கு உறுதியளித்துள்ளது.

நேற்று முன்தினம் பி.ப. 3.00 மணிக்கு படையினருக்கும் அரச அதிகாரிகளுக்கும் உசன்,எழுதுமட்டுவாள்,மிருசுவில் பகுதி விவசாயிகளுககும் இடையில் உசன் மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற கலந்துரையாடலிலேயே மேற்படி உறுதிமொழி வழங்கப்பட்டுள்ளது.

யாழ். அரச அதிபர் செ. பத்மநாதனின் பணிப்புரையின் பேரில் யாழ். செயலகத் திட்டமிடல் பணிப்பாளர் பு. சுந்தரம்பிள்ளையினால் ஏற்பாடு செய்யப்பட்ட மேற்படி கலந்துரையாடலில் விவசாயிகளால் மேலும் பல கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன.

விவசாயிகள் பயன்படுத்தும் வீதிகளைச் செப்பனிடல், படையினரின் பாவனையில் உள்ள பாதைகளை விவசாயிகளின் பாவனைக்குத் திறந்துவிடல், குளங்கள், வெள்ள வாய்க்கால்களைப் புனரமைத்து வெள்ளம் வடிந்தோடச் செய்தல் மற்றும் கட்டாக்காலி மாடுகளை பாதுகாப்பு வலயத்தில இருந்து விவசாயப் பகுதிகளுக்கு வராது தடை செய்தல் போனற பல கோரிக்கைகள் விவசாயிகளால் முன்வைக்கப்பட்டன.

அத்துடன், உவர் நீர் உட்புகாது அரண் அமைக்க வேண்டும் என விவசாயிகள் தரப்பில் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு இராணுவத்தின் 55ஆவது படையணி அதிகாரி லெப்டினன்ட் ரதநாயக்கா பதிலளிக்கையில், கட்டாக்காலி மாடுகள் உட்புகாதவாறு வேலிகள் அமைத்துத்தருவதாகவும் வேறு சிலவற்றுக்கு பலாலிப்படைத்தளபதிகளுடனும், உயர் அதிகாரிகளுடனும் கலந்து ஆலோசித்த பின்னர் முடிவு தெரிவிப்பதாகவும் தெரிவித்தார்.

தொடர்ந்து யாழ். செயலகத்திட்டமிடல் பணிப்பாளர் பு.சுந்தரம்பிள்ளை தெரிவிக்கையில்,

தற்காலிகமாக வெள்ள நீர் தேங்காது பாய்வதற்குரிய நடவடிக்கை உடனடியாக எடுக்கப்படும். நியாப்திட்டத்தின் ஊடாக மேலதிக பிரச்சினைகளுக்குப் படிப்படியாக முடிவு காணப்படும். இக்கலந்துரையாடலில் இனம் காணப்படும் பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வு காணப்படும் என தெரிவித்தார்.

இக்கலந்துரையாடலின் போது விவசாயச் செய்கைக்குத் தேவையான விதைநெல் மற்றும் பசளை என்பன இலவசமாகப் பெற்றுத்தரப்ப ம எனவும், விவசாயப் பயிற்சிகளை வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்படும் எனவும் அரச அதிபரால் உறுதி வழங்கப்பட்டுள்ளது.

விவசாய சம்மேளனத் தலைவர் வல்லிபுரம் தலைமையில் நடைபெற்ற மேற்படி கலந்துரையாடலில் தென்மராட்சி பிரதேச செயலர் செ. ஸ்ரீனிவாசன்,கமநல சேவைகள் உதவிப பணிப்பாளர் சுந்தரேசன், உதவி விவசாயப் பணிப்பாளர் சின்னத்துரை உட்பட நியாப் நீர்ப்பாசன அதிகாரிகள், தென்மராட்சி உதவி அரச அதிபர் காரியாலய உதவித் திட்டமிடல் பணிப்பாளர் ஆகியோர் உட்பட பல முக்கிய பிரமுகர்களும் கலந்து கொண்டனர்.

இதேவேளை, பொதுமக்களின் பகுதியில் இராணுவத்தினரால் பனை மரம் தறிப்பதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளதாகவும்,இதையும் மீறி இராணுவத்தினரால் பனை மரங்கள் தறிக்கப்பட்டால் தமக்கு உடனடியாக அறிவித்தல் நடவடிக்கை எடுப்பதாகவும் இராணுவ அதிகாரி தெரிவித்துள்ளமை குறிபபிடத்தக்கது. (ந-29)

# தே. அ. அட்டை கட்டாயமாக்கல் சர்வஜன வாக்குரிமையைப் பாதுகாக்கும்

## ஐ. ம. சு. முன்னணி நம்பிக்கை

(கொழும்பு)

தேர்தல்களில் வாக்களிப்பதற்கு தேசிய அடையாள அட்டையை கட்டாயப்படுத்தும் உத்தேச சட்ட மூலம் சர்வஜன வாக்குரிமையைப் பாதுகாக்கும் என ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி நம்பிக்கை தெரிவித்துள்ளது.

ஐக்கிய மக்கள் சுதந்திரமுன்னனி விடுத்த அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னணியில் அங்கம் வகிக்கும் கட்சிகளில் ஊடகப்பேச்சாளர்களான விமல் வீரவன்ச, மங்கள சமரவீர ஆகியோர் இணைந்து இந்த அறிக்கையை விடுத்துள்ளனர்.

அந்த அறிக்கையில், மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, தேர்தலில் வாக்களிக்க தேசிய அடையாள அட்டையை காட்டாயமாக்கும் நடவடிக்கையானது வாக்களிப்பின் உரிமைக்கு உத்தரவாதமளிக்கும்.

இவ் உத்தேச சட்ட மூலத்திற்கு எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக்கட்சி தெரிவித்த நிபந்தனைகளை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி திட்டவட்டமாக நிராகரித்துள்ளது.

இந்த நகல் சட்ட மூலம் பாராளுமன்றத்தில் நாளையும், நாளை மறுதினமும் விவாதத்திற்கு எடுக்கப்படவுள்ளது.

இதேவேளை, இந்த உத்தேச சட்டமூலம் அரசியல் யாப்பு விதிகளை மீறுவதாக ஐக்கிய தேசியக்கட்சி கூறி வருகின்றது.

அவ்வாறு இச்ச சட்டமூலம் அரசியல் யாப்பு விதிகளை மீறுதவதாக இருந்தால் அதை பாராளுமன்றில் சமர்ப்பிப்பதற்கு உயர் நீதிமன்றம் அனுமதியளித்திருக்காது.

இவை தவிர, தேசிய அடையாள அட்டைகள் தேர்தல்களில் வாக்களிப்பதற்கு கட்டாயம் பயன்படுத்தப்பட்டால் தேர்தலில் இடம் பெறும் மோசடிகளைத் தடுக்கமுடியும் என்றுள்ளது. (க-121)

# மக்களுக்கும் - பொலிஸாருக்குமிடையில் நல்லுறவுகளை வளர்க்க நடவடிக்கை

## புதிய பொலிஸ்மா அதிபர் உறுதிமொழி

(கொழும்பு)

பொது மக்களுக்கும் பொலிஸாருக்கும் இடையில் நல்லுறவை வளர்த்து நம்பிக்கையைக் கட்டி எழுப்புவதற்கு சகல நடவடிக்கைகளும் எடுக்கப்படும் என புதிய பொலிஸ்மா அதிபர் சந்திரா பெர்ணான்டோ உறுதியளித்துள்ளார்.



இலங்கையின் 29ஆவது பொலிஸ்மா அதிபராக நேற்று பதவியேற்க முன்னர் ஊடகம் ஒன்றிற்கு வழங்கிய விசேட செவ்வியிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் இது குறித்துத் தெரிவிக்கையில்,

மக்களுக்கும் பொலிஸாருக்கும் இடையில் நல்லுறவை வளர்ப்பதற்கு சகல மக்களினதும் ஒத்துழைப்புப் பெற்றுக் கொள்ளப்படும்.

இதேவேளை, பொலிஸ்சேவையில் அடிமட்டத்தில் உள்ள அதிகாரிகளின் பிரச்சினைகள் குறித்தும் விசேட கவனம் செலுத்தப்படவுள்ளது.

இந்தத் திட்டத்தை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்துவதற்காக தேசிய பொலிஸ் ஆணைக்குழுவுடன் நல்லெண்ண அடிப்படையில் இணைந்து செயற்படவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றார். (த-61)

# கல்விச்சேவை ஊழியர் போராட்டத்திற்கு யாழ்.பல்கலை ஊழியர் சங்கம் ஆதரவு

(யாழ்ப்பாணம்)

கல்விச்சேவை ஊழியர்களின தொழிற்சங்கக் கூட்டமைப்பின் ஆர்ப்பாட்டப் பேரணிக்கு தார்மீக ஆதரவு வழங்குவதாக யாழ். பல்கலைக்கழக ஊழியர் சங்கம் தெரிவித்துள்ளது.

இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00மணிக்கு கொள்ளுப்பிட்டி ஈ,டி.சி.எஸ். மண்டபத்தில் நடைபெறவுள்ள கல்விச்சேவை ஊழியர்களின் தொழிற்சங்கக் கூட்டமைப்பின் இவ் ஆர்ப்பாட்டப் பேரணிக்குத் தமது தார்மீக ஆதரவை வழங்குவதுடன், கல்விச் சேசை ஊழியர்களின் கோரிக்கைகள் வெற்றிபெற வாழ்த்துவதாகவும் யாழ்.பல்கலைக்கழக ஊழியர் சங்கம் மேலும் தெரிவித்துள்ளது. (ந-5)

# தமிழ்த் தேசிய விழிப்பூட்டல் குழு 15 ஆம் திகதி திருமலை விஜயம்

(திருகோணமலை)

தமிழ்த்தேசியத்தின் நிலைப்பாட்டை மக்களுக்கோ, சர்வதேச சமூகத்துக்கோ அரசாங்கத்துக்கோ வெளிப்படுத்த அமைக்கப்பட்டுள்ள தமிழ்த்தேசிய விழிப்பூட்டல் குழு எதிர்வரும் 15ஆம் திகதி திருகோணமலைக்கு விஜயம் செய்யவுள்ளது.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனுக்கும் இடையில் கடந்த ஆகஸ்ட் மாதம் 30 ஆம் திகதி இடம்பெற்ற சந்திப்பையடுத்து தமிழ்த் தேசிய விழிப்பூட்டல் குழு அமைக்கப்பட்டிருந்தது.

தமிழ்த் தேசியத்தின் நிலைப்பாட்டை விளக்குவதற்காகவும் விடுதலைப்புலிகளால் சமர்ப்பிக்கப்பட்ட இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபையின் தேவையை மக்களுக்குத் தெளிவுபடுத்துவதற்காகவுமே இக்குழு அமைக்கப்பட்டிருந்தது.

மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்குடன இக்குழு எதிர்வரும் 15ஆம் திகதி முதல் மூன்று தினங்கள் திருகோணமலையின் சகல பகுதிகளுக்கும விஜயம் செய்து அங்குள்ள மக்களின் பிரச்சினைகள் குறித்து விரிவாக ஆராயவுள்ளது. (ந-121)

## தினசரி தியானம்

## விவேகச் சிந்தனைகள்

கோழைகளுடனோ அல்லது அர்த்தமற்ற அரசியலுடனோ எனக்கு எந்தவிதத் தொடர்பும் இல்லை. கடவுளும் உண்மையும் தான் இந்த உலகிலுள்ள ஒரே அரசியலாகும். மற்றவை எல்லாம் வெறு குப்பை தான்.

சுவாமி விவேகானந்தர்

# பொலிஸாரை கலக்கிய மர்ம நபர்

(திருநெல்வேலி)

சாவகச்சேரி புத்தூர் சந்தியில் ஏற்பட்ட வெடிகுண்டுப் பீதியால் நேற்று முன்தினம் இரவு 7 மணியளவில் கண்டிவீதியூடான போக்குவரத்து சில மணிநேரம் தடைப்பட்டது.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது, கண்டிவீதி ஊடாக நடந்துசென்றுகொண்டிருந்த நபர் ஒருவர் கொண்டுசென்ற பொதியின் மீது பொலிஸாருக்கு சந்தேகம் ஏற்பட்டதால் அதனைச் சோதனை செய்வதற்காக பிரஸ்தாப நபரைப் பொலிஸார் பின்தொடர்ந்தனர்.

இதனை அவதானித்த பிரஸ்தாப நபர் கண்டிவீதிவழியாக ஓட்டம் பிடித்துள்ளார். இதனால் மேலும் சந்தேகம் அடைந்த பொலிஸார் பிரஸ்தாப நபரை துரத்திச் செல்லவே களைப்படைந்த நபர் தான் கொண்டுசென்ற பொதியை புத்தூர் சந்திக்கு அருகில் உள்ள பற்றைக்குள் எறிந்துவிட்டு தப்பியோடி தலைமறைவாகியுள்ளார்.

இதனையடுத்து பிரஸ்தாப நபரினால் பற்றைக்குள் எறியப்பட்ட பொதியை மீட்பதற்காக இராணுவத்தின் வெடிபொருள் அகற்றும் பிரிவினரை பொலிஸார் வரவழைத்து கண்டிவீதியின் போக்குவரத்தைச் தடைசெய்து பற்றைக்குள் எறியப்பட்ட பொதியை மீட்டெடுத்தனர்.

இவ்வாறு பலத்த பீதியின் மத்தியில் இராணுவம் மற்றும் பொலிஸாரால் பொதி மீட்கப்பட்டு பரிசோதிக்கப்பட்டது. இதன்போது பொதிக்குள் இருந்தது போலிக் கட்டுத் துப்பாக்கி எனத் தெரியவந்தது. (ப-43)

# பல்கலைக்கழக தினம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் "பல்கலைக்கழக தினம்" நாளை பிற்பகல் 2 மணிக்கு துணைவேந்தர் பேராசிரியர் சு. மோகனதாஸ் தலைமையில் கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பல்கலைக்கழகத்தில் 25 வருட சேவையை பூர்த்திசெய்தவர்களுக்கு விருது வழங்கல் மற்றும் கலைநிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

இந்நிகழ்வில் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (ச)

# அதி நவீன வைத்தியசாலையை யாழில் அமைக்க ஜப்பான் உதவி

(திருநெல்வேலி)

யாழ்.மாவட்டத்தில் அதி நவீன வைத்தியசாலை ஒன்றை நிர்மாணிப்பதற்கு ஜப்பான் அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

யுத்த நடவடிக்கைகளால் மிகவும் பாதிப்படைந்துள்ள யாழ். குடாநாட்டு மக்களுக்கு நவீன வைத்திய வசதிகளை வழங்கும் நோக்கிலேயே யாழ். குடாநாட்டில் அதி நவீன வைத்தியசாலையை நிர்மாணிக்க ஜப்பான் அரசாங்கம் முன்வந்துள்ளது.

இவ் வைத்தியசாலையில் புற்றுநோய், நீரிழிவு, காசநோய் மற்றும் இருதயநோய் ஆகியவற்றுக்கு நவீன முறையிலான சிகிச்சைகள் வழங்கப்படவுள்ளன.

மேற்படி அதிநவீன வைத்தியசாலையை நிர்மாணிக்கும் இடத்தைத் தேர்ந்தெடுப்பது உள்ளிட்ட ஏனைய முக்கிய விடயங்கள் குறித்து ஆராய்வதற்காக எதிர்வரும் நவம்பர் மாத முற்பகுதியில் ஜப்பானியப் பிரதிநிதிகள் 6 பேர் யாழ்.குடாநாட்டிற்கு வருகை தரவுள்ளனர். (ரு-43)

# விண்ணப்பம் கோரல்

(சாவகச்சேரி)

பொது எழுதுநர்சேவை, கணக்குப் பதிவாளர், களஞ்சியக் காப்பாளர் பதவிகளின் தரம் -2 பதவியில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களை தரம் 1 இற்கு பதவி உயர்த்துவதற்கான போட்டிப்பரீட்சைக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

தரம் 2 'அ' தரத்தில் பத்து வருடங்களைப் பூர்த்திசெய்த உத்தியோகத்தர்கள் இப்போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பிக்கமுடியும் என பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது.

விண்ணப்ப முடிவு திகதி எதிர்வரும் நவம்பர் 2 ஆம் திகதியாகும். (ச-47)

# தமிழ்மொழித் தின தேசியப் போட்டிகள்

தமிழ்மொழித்தின தேசிய மட்டப் போட்டிகள் இம்மாதம் 9ஆம், 10 ஆம், 11 ஆம் திகதிகளில் கொழும்பு பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

போட்டிகளில் பங்குபற்றும் மாணவர்களும், ஏற்கனவே மாகாண மட்டத்தில் நடைபெற்ற தேசிய மட்ட எழுத்துருவாக்கப் போட்டிகளில் பங்குபற்றிய மாணவர்களும் பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரியில் அமைக்கப்பட்டுள்ள தமிழ்மொழித் தினப்போட்டி ஏற்பாட்டுப் பணிமனையில் 8 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பி.ப. 2 மணி முதல் தமது பதிவுகளை மேற்கொள்ளலாம்.

மாணவர்கள் தமது பதிவுகளை மேற்கொள்ளும்போது தேசிய அடையாள அட்டை அல்லது அஞ்சல் அடையாள அட்டை, அல்லது பாடசாலை அதிபரினால் உறுதிப்படுத்தப்பட்ட புகைப்படத்தினைச் சமர்ப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

இவ்வருடம் போட்டிகளில் பங்குபற்றும் சகல மாணவர்களும் சான்றிதழ்களும், நினைவுப் பரிசில்களும் வழங்கப்படவுள்ளதாக கல்வியமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார். (வ)

## உலக வங்கிக்...

சென்று உலக வங்கியின் உதவியுடன் முன்னெடுக்கப்படும் வீட்டுத் திட்டங்களை பார்வையிட்டனர். இன்று மருதங்கேணி, கிளிநொச்சி ஆகிய இடங்களுக்குச் செல்லும் பிரஸ்தாப குழுவினர் அங்கு அமைக்கப்பட்டுவரும் உலக வங்கியின் நிதியுதவியுடனான வீட்டுத் திட்டங்களைப் பார்வையிடுவர்.

இதேவேளை குடாநாட்டில் அடுத்த வருடம் 4 ஆயிரம் வீட்டுத் திட்டத்தை நடைமுறைப்படுத்த உலக வங்கி முன்வந்துள்ளதாக யாழ். செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (த-19)

## பொலநறுவை...

பிள்ளை சேனாதிராஜா (வயது 46), தர்மலிங்கம் ரஞ்சன் (வயது 26) மற்றும் கே.விஜயகுமார் (வயது 23) ஆகியோரே கடத்தப்பட்டவர்களாவர். இவர்களில் விஜயகுமார் என்பவர் மட்டும் விடுவிக்கப்பட்டுள்ளார். (ச)

## சமாதான....

விடார் ஹெல்கீசன் மேற்கண்டவாறு பாராட்டியுள்ளார்.

சுவிஸ்லாந்தில் கடந்த 3 நாட்களாக விடுதலைப் புலிகளின் அரசியல் விவகாரக் குழுவினர் சர்வதேச நிபுணர்களுடன் இடைக்கால தன்னாட்சி வரைபு குறித்து கலந்துரையாடல்களை நடத்திய பின், தமிழர் தாயக மனிதவுரிமை அமைப்புப் பிரதிநிதிகளையும் சந்தித்துக் கலந்துரையாடியபின், நேற்று நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விடார் ஹெலகீசனையும், அதற்கு முன்பாக நோர்வேயின் சமாதான சிறப்புத் தூதுவர் எரிக்சொல் ஹெய்மையும் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் சட்ட ஆலோசகர் வி.உருத்திரகுமாரன் தலைமையில் நடைபெற்ற இச் சந்திப்பின்போது, தமிழீழ விடுதலைப் புலிகள் தொடர்ச்சியான சமாதான முயற்சியில் ஈடுபடுவதில் மிகவும் உறுதியாக உள்ளனர் என்று விடார் ஹெல்கீசனிடம் வி.உருத்திரகுமாரன் தெரிவித்துள்ளார். இக் கலந்துரையாடலில் சுவிஸ் பல்கலைக்கழகப் பேராசிரியரும் சுவிஸ் கூட்டாட்சி வெளிவிவகார நிபுணருமான கீளினரும் கலந்துகொண்டனர்.

இக் கலந்துரையாடல்களின் பின்னர் நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கீசன் கருத்துத் தெரிவிக்கையில், இலங்கை அரசின் சமாதான நடவடிக்கைகள் கைக்கெட்டாத நிலையிலும் அதற்கான தொடர் முயற்சிகளை விடுதலைப் புலிகள் அமைப்பு முன்னெடுத்துச் செல்வதில் உறுதியாக இருப்பதும் மகிழ்ச்சியை ஏற்படுத்துவதாக அமைந்துள்ளது என்றும் கூறியுள்ளார். (ம)

## இடைக்கால...

தடிக்கும் செயலாகும் எனவும் அக்கட்சிகள் தெரிவித்துள்ளன. ஜாதிக ஹெல உறுமயவும், விடுதலைப் புலிகளுடன் நிபந்தனையற்ற பேச்சுவார்த்தைக்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்றைய அங்குரார்ப்பண கூட்டத்தில் கலந்துகொள்ளவில்லை.

இவ் ஆலோசனைச் சபை கூட்டத்தில் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் அங்கம்வகிக்கும் சுதந்திரக் கட்சி, மக்கள் விடுதலை முன்னணி (ஜே.வி.பி), ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி(ஈ.பி.டி.பி), இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் மற்றும் மதப் பிரமுகர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இவ் ஆலோசனைச் சபைக் கூட்டத்தில் ஜனாதிபதி, பிரதமர், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோர் உரையாற்றினர்.

அங்கு உரை நிகழ்த்திய ஜனாதிபதி தமிழீழ விடுதலைப் புலிகளை பேச்சுவார்த்தை மேசைக்குக் கொண்டுவர அரசாங்கம் சகல முயற்சிகளையும் எடுத்திருக்கின்றது. சமாதானப் பேச்சுவார்த்தையின் முடிவானது ஐக்கிய இலங்கைக்குள்ளான தீர்வாக அமையவேண்டும். இடைக்கால நிர்வாகத்தை ஏற்படுத்த அரசு சம்மதம்தான். ஆனால் அதனோடு இணைந்த இறுதித் தீர்வு பற்றிய பேச்சும் முன்னெடுக்கப்படும் என்பதில் அரசு உறுதியாக உள்ளது எனவும் ஜனாதிபதி தெரிவித்தார். (த-08)

# கொலை அச்சுறுத்தலால் மட்டக்களப்பு எம்.பிக்கள் கலந்துகொள்ளவில்லை

இனந்தெரியாத நபரினால் விடுக்கப்பட்ட கொலை அச்சுறுத்தல் காரணமாக மட்டக்களப்பு கிரான் மகாவித்தியாலய பரிசளிப்பு விழாவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் நேற்று கலந்துகொள்ளவில்லை.

மகாவித்தியாலயத்தின் பழைய மாணவனும் பாராளுமன்ற உறுப்பினருமான எஸ். ஜெயானந்தமூர்த்தி பிரதம அதிதியாகவும், ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்களான பா.அரியநேத்திரன், த.கனகசபை மற்றும் தங்கேஸ்வரி கதிர்காமர் ஆகியோர் விசேட அதிதிகளாகவும் அழைக்கப்பட்டிருந்தனர். பாராளுமன்ற உறுப்பினர் எஸ். ஜெயானந்தமூர்த்திக்கு இந்த நிகழ்வில் கலந்துகொண்டால் கொலை நடக்குமென எச்சரிக்கை விடுக்கப்பட்டிருந்தது. இதன் காரணமாகவே அவரும் ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்களும் நிகழ்வில் கலந்துகொள்ளவில்லை.

## அரசு ஆயுதக் கொள்வனவு

சமாதான முயற்சிகளை இழுத்தடித்துச் செல்லும் அரசாங்கம் யுத்த நடவடிக்கைகளுக்கான பாரிய ஆயுதக் கொள்வனவில் ஈடுபட்டுள்ளது.

அமைச்சரவை அங்கீகாரத்துடன் இடம்பெறவுள்ள இந்த ஆயுதக் கொள்வனவில் கடற்படையினருக்கான யுத்தக் கப்பல்களையும் நீண்டதூரம் தாக்கக்கூடிய பீரங்கிகளையும், விமானப் படையினருக்கு 3 யுத்த விமானங்களையும் கொள்வனவு செய்யவுள்ளது (ம)

# பஸ் குடைசாய்ந்தது

யாழ்ப்பாணத்திலிருந்து முகமாலை நோக்கிச் சென்றுகொண்டிருந்த இலங்கைப் போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ் ஒன்று நேற்றுப் பிற்பகல் 2 மணியளவில் கைதடிப் பாலத்திற்கு அருகில் குடைசாய்ந்தது.

கைதடிப் பாலம் திருத்தும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதால் பிரதான வீதிக்கு அருகாமையில் தற்காலிகமாகப் பாதை அமைக்கப்பட்டு அதனூடாகப் போக்குவரத்து நடைபெறுகிறது. இப்பாதை ஊடாகச் செல்லும் போதே பஸ் குடைசாய்ந்தது.

எனினும் பயணிகள் எவருக்கும காயம் எதுவும் ஏற்படவில்லை. பஸ் குடைசாய்ந்ததால் பயணிகள் பெரும் அல்லோலகல்லோலப்பட்டனர். (ச-47)

## ஜனாதிபதி சந்திரிகாவினால்...

அப் பேட்டியில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது,

கடந்த காலங்களில் ஜனாதிபதியினால் பல்வேறு குழுக்கள் நியமிக்கப்பட்டும், வட்டமேசை மாநாடுகள் நடத்தப்பட்டும் ஆக்கபூர்வமான எந்த முடிவும் எட்டப்படவில்லை.

இத்தகைய குழுக்கள் செயற்பட்டபோதும் எமது மக்களின் நன்மைக்காக ஆக்கபூர்வமான எந்தவிதமான தீர்மானங்களும் எடுக்கப்படவில்லை. இந்நிலையில் இக் குழுக்கள் அமைக்கப்படுவதில் எமக்கு நம்பிக்கையில்லை.

தேசிய ஆலோசனைச் சபை தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சியும், தமிழ்த் தேசிய கூட்டமைப்பும் தமது எதிர்ப்பைத் தெரிவித்துள்ளன. சமாதான முயற்சிகளை முன்னெடுப்பதில் காலதாமதத்தை ஏற்படுத்துவதே இத்தகைய குழுக்கள் அமைக்கப்படுவதன் நோக்கமாகும் என்று கூறிய தமிழ்ச்செல்வன், தமது ஐரோப்பிய விஜயத்தின்போது ஜேர்மனி, பெல்ஜியம், நோர்வே, அயர்லாந்து ஆகிய நாடுகளுக்கு செல்லவுள்ளோம் என்றும் கூறினார். (ம)


YOGI Beauty parlour
(Academy of Beauty Culture & Hair Dressing)
Home Science Academy

குறுகிய கால புதிய பயிற்சி வகுப்புக்கள் இம் மாதம் 9ஆம் 10 ஆம் திகதிகள் (சனி, ஞாயிறு) முதல் ஆரம்பமாகவுள்ளன.

- கேக் ஐசிங், மேலைத்தேய ஐசிங் அலங்காரம் மாச்சீனி மலர் அலங்காரம் (Fondant structures & sugar flowers)
- முக ஒப்பனை, தலை அலங்காரங்கள், மணப்பெண் அலங்காரம்.
- அழகுக் கலையும் மூலிகைச் சிகிச்சை முறைகளும் (Facial classes) (Beauty culture and Herbal therapy)

❖ இதில் பாடக் குறிப்புகளுடன் கூடிய செய்முறை விளக்கங்கள் பயிற்சி அளிக்கப்படும். சேர விரும்பும் மாணவிகள் உடன் தொடர்பு கொள்ளவும்.

75, அம்மன் றோட், நல்லூர், யாழ்ப்பாணம்
(நல்லூர் வீரமாகாளி அம்மன் கோயில் முன்பாக)
T.P: 222 2796
(C/609)





வட்டுக் கிழக்கு வட்டுக்கோட்டையைச் சேர்ந்த மனோராஜன் - வளர்மதி தம்பதிகளின் செல்வப்புதல்வன் (யாழ் - திருஞான சம்பந்தர் வட்டுக்கோட்டை வித்தியாசாலை மாணவன்)

செல்வன் - லக்ஸ்மன்

அவர்கள் 5ம் தரப் புலமைப்பரீட்சையில் சித்தியடைந்ததையிட்டு (145 புள்ளிகள்) அவரை மனமார வாழ்த்துவதுடன் அவர் தொடர்ந்தும் வெற்றிபெற எமது நல்லாசிகளைத் தெரிவிப்பதுடன் அவர் சித்திபெற ஊக்கமளித்து வழிகாட்டிய அதிபர் ஆசிரியர்கள் அனைவரையும் நன்றியுடன் வாழ்த்துகின்றோம்.

பாராட்டுபவர்கள்
அப்பா, அம்மா

(C/608)


இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 05.10.2004 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.